19-6-1938 to 4-12-1938 சேர்க்கை 6

பர்மா—மலாய் 0-1-3 | இலங்கை—6 சதம்

TAMIL MANI | REGD NO. M. 3384

தமிழ் மணி

சுதந்திரம் எனது பிறப்புரிமை

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

(வாரப் பதிப்பு)

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4
ஓசை 4

சென்னை—வெகுதானிய ஹூ கார்த்திகை மீ 19உ ஞாயிற்றுக்கிழமை (4—12—38)

விலை
அரையணா

மௌலானா மறைந்தார்

இந்திய சுதந்திர வீரரும் இந்திய மக்களின் முத்தண்ணுபோன்று விளங்கியவருமான மௌலானா ஷவுக்கத் அலி மறைந்தார். சுமார் 15 வருடங்களுக்குமுன் அலி சகோதரர்களென்றால் பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொர்ப்பனந்தான்! இந்திய மக்களுக்கோ அலி சகோதரர்களென்ற பெயரே வீரத்தையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஊட்டி வந்தது. அலி சகோதரர்களை காந்திஜி அவருடைய சகோதரர்களாகப் பாவித்து வந்த காலமுண்டு. பிற்காலத்தில் அலி சகோதரர்கள், காங்கிரஸிலிருந்து விலகி, ஒருவித வகுப்புவாதிகளானபோதிலும், அவர்கள் தேசத்துக்குச் செய்த தியாகத்தையும், சேவையையும் இந்திய மக்கள் என்றும் மறக்க முடியாது. மௌலானா ஷவுக்கத் அலியின் ஆன்மா சாந்தியடையுமாக.

HIGH CLASS MISKY

ASAFOETIDA

75 வருஷங்களாக
மிகப்பிரக்யாதியுடன்
லக்ஷக்கணக்கான
இந்திய குடும்பங்கள்
தினம் உபயோகிப்பது
மிஸ்கி A மார்க்
பெருங்காயம்
A மார்க் பெருங்காயம்
வாங்கினால்
ஏமாற்துவதற்கு இடமில்லை.
A மார்க் என்று கேளுங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்

கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. மதராஸ்

SEARCHLIGHT CUTTING DIAMONDS REGD

சர்ச்லைட் கட்டிங்டைமன்டஸ்
வர்ஜீனியாமலைப்பிரதேச
ங்களில்உற்பத்தியாகி சிறந்
த மின்சாரசாஸ்திரிகளின்
ஆராய்ச்சியால் கண்டு பி
டிக்கப்பட்டு அசல் வை
ரங்களுக்கு இணை
யாக விளங்குவது
சர்ச்லைட்வைரங்கள்

S.தீன்சேட்
94, தங்கசாலை தெரு
சௌகார் பேட்டை
ஜி.டி. மதராஸ்.

தோடு சைஸ் கமலம் 1க்கு 0-8-0 கடுக்கன் சைஸ் கமலம் 1க்கு 0-7-0 பேசர் சைஸ் கமலம் 1க்கு 0-6-0

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்
ஜீவிய சரித்திரம்

இந்திய நாட்டின் இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரம். சுபாஷ் போஸின் வீர வாழ்க்கையையும், தியாக புத்தியையும், சீரிய குணத்தையும் இந் நூலில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் இதை வாசித்துப் பயன் பெறுவார்களாக.

புத்தகம் 1 க்கு விலை அணா 4.
5 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் அனுப்பப்படும்.

மலாய் நாட்டிலுள்ளவர்களும், மற்ற அந்நிய நாட்டிலுள்ளவர்களும் 0—8—6 ஸ்டாம்பு அனுப்பிவைத்தால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "தமிழ்மணி"

ஜெர்மன் ரிப்பீடிங் அலாரம் பிஸ்டல்



இது நூதன முறையில், உயர்தர எஃகுத் தகட்டினால் தயாரித்தது. உள்ளே பலத்த ஸ்பிரிங், ஆக்ஷனுடன் அமைக்கப்பட்டது ஏககாலத்தில் எட்டு அல்லது பத்து வேடிகள் உடனுக்கு உடனே, கனத்த சப்தத்துடனும், நெருப்புடனும், புகையுடனும் கிளம்பி, எதிரிகளை பிரமிக்கச் செய்யும். இது உண்மையில், ஒரு பெரிய கைத் துப்பாக்கிக்கு ஒப்பானது.

50 கேப்புகளுடன் கூடிய பிஸ்டல் விலை ரூ. 3-0-0
தபால் செலவு பிரத்தியேகம். தனியே கேப்புகள் 50-க்கு ரூ. 1.
எமது விலாசம்: பக்தா அண்டு கம்பேனி,
1-24, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை.

ஷாக்புரூப் லிவர் கைக் கடிகாரம்

எந்தவித தொழிலாளரும் அதை உபயோகப்படுத்தலாம். மிகவும் உறுதியான மிஷின். ஏதோ கை தவறுதலாக கீழே விழுந்த போதிலும் கடிகாரத்திற்கு ஒருவிதமான அபாயமும் ஏற்படாது. மிகவும் குறைந்த விலை இரண்டு வருஷ உத்திரவாதத்துடன் லிவர் ரவுண்டு கிளாஸ் ரவுண்டு கேஸ் கடிகாரத்தின் விலை ரூ. 3 15-0 ரவுண்டு கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 4-12-0 சதுர கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 7 8-0

ஹெட் ஆபிஸ்:—ஸ்டார் வாச் கம்பெனி, மூர்மார்க்கட் சென்னை.
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,



ஸ்தாபிதம், 1914 டெலிபோன் நெம்பர் 2224
புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், உடராஜன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேச முதலியார்.

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சியக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள் இதர மிஷினரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59. பிராட்வே மதராஸ்.

Rg. No. 3379

ரினோ

விஜிடபிள் டானிக் ஸிரப்

சிறந்த ரத்த புஷ்டியை உண்டாக்கும்

டாக்டர்கள் இதை பெருமையாய் புகழ்ந்து அனேகருக்கு சிபார்சு செய்கிறார்கள். சாம்பில் வேண்டுவோர் 0—2—0 ஸ்டாம்பு அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.
சி. எப். அண்டு சன்ஸ் 503, தங்கசாலைத் தெரு சென்னை.

ஆச்சரியமான ஔஷதம்

24 மணி நேரத்தில் வெள்ளையும் எரிச்சலும் நின்றுவிடும்
கெடியாரம் வைத்து பரிக்ஷிக்கவும்

குணமில்லாவிடில் ரூபாய் வாபீஸ்

ஸ்ரீ. சத்தியநாராயண மாத்திரை

இம்மகா மகத்துவம் பொருந்திய மாத்திரையை, காலை மாலை சாப்பிட்டால் வெள்ளை என்னும் கொடிய ரோகம் அடியோடு ஒழிந்து விடும். சில மருந்துகள் அப்பொழுது மாத்திரம் வியாதியை கண்டித்து பிறகு வந்துவிடும். அதனால் தளர்ந்த வயதில் பலவிதமான மேக வியாதிகள் உற்பத்தியாகி கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்று யாவருக்கும் தெரிந்த விஷயம். இம்மருந்தை சாப்பிட்டால் ஆயுள்பரியந்தம் அந்த வியாதி தலை காட்டாது, நல்ல காலம் உள்ளவர்கள் இதை உடனே வாங்கி பரிக்ஷிப்பார்கள். அனேக படாடோப ஔஷதங்களை சாப்பிட்டு ஏமாந்தவர்களுக்கு சந்தேகமாகத்தான் இருக்கும். வியாதி உள்ளவர்கள் எந்த மருந்தும் சாப்பிடாமல் இதை உடனே வாங்கி சாப்பிட்டு உங்கள் கவலையை ஒழியுங்கள் பொய்யல்ல உண்மை ஆண் பெண் இருவரும் சாப்பிடலாம்.

10-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூ. 1-4-0 20-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூ. 2-0-0

எமது விலாசம்:— A. S. வைத்தியசாலை, 8-வது பீட்டு, வேப்பேரி போஸ்டு மதராஸ்.

மதுரை ராணி மங்கம்மாளுக்கும், சொக்கன் தாயார் முத்தம்மாள் ராணிக்கும், தஞ்சை இளவரசி மோகனாவைச் சொக்கநாதனுக்கு விவாகஞ்செய்து வைக்க விருப்பம். அதற்காக, பழையபகைமையையும்பொருட்படுத்தாமல், தஞ்சை அரசரிடம் ஒரு தூதுக்கோஷ்டியை அனுப்பி வைத்தார்கள். ஆனால், அதே சமயத்தில் மோகனாவை சண்டாளன் அங்கப்பனுக்கு மணஞ்செய்து வைக்க, அங்கப்பன் சகோதரியும், மோகனாவின் மாற்றுத்தாயுமான தஞ்சை இளைய ராணி அந்தரங்கத்தில் தந்திரமாக வேலை செய்துவந்தாள். சிறையிலிருந்த தஞ்சை இளவரசர் மோகனாவின் அண்ணனைக் கொன்று, மோகனாவை அங்கப்பனுக்கு விவாகஞ்செய்வித்து, அங்கப்பனை தஞ்சைக்கு அரசனாக்கவேண்டுமென்பது இளைய ராணியின் நோக்கம். இதற்காக அவள் மோகனாவிடம் அதிக அன்புள்ளவள்போல் நடித்தாள். அரசர் புத்திரியையும் மயக்கி வந்தாள். ஆனால், அவள் ஜம்பம் மோகனாவிடம் சாயவில்லை.

சொக்கநாதன் தொடர் கதை

ராணி செய்த சூழ்ச்சி

ராணி சிறிது நேரம் மோகனாவுடன் பேசிக்கொண்டிருந்தபின் அங்கிருந்து போகப் புறப்பட்டாள்.

"கண்ணே! மோகனா......நான் போய் வரட்டுமா? எப்பொழுதும் என்னை உன் பெற்ற தாயாக நினைத்துக் கொள்."

"அம்மா, நான் அப்படியே நினைத்திருக்கிறேன் இதைத் தவிர...!"

"மோகனா நீ கூறியதைக் கேட்டு எனக்குப் பரம சந்தோஷம்!...உன் வாயால் இந்த வார்த்தைகளைக் கூறக் கேட்கும் என் செவிக்கு இது பரம அமிழ்தம்!...எப்பொழுதும் உனக்கு வேண்டியதை என்னிடம் தாராளமாக வந்து கேள்''

"அம்மா, உங்கள் கிருபையால் எனக்கு ஒரு குறைவுமில்லை... வேண்டும்போது...நான் உங்களிடம் கட்டாயம் வருவேன்..."

"கண்டிப்பாக நீ என்னிடம் வரவேண்டும்...உன்னைப் பார்க்கும் போதெல்லாம் உன்மீது நான் பெற்ற குழந்தைபோல் எனக்கு ஒரு வாஞ்சையுண்டாகிறது!.... உன்னை பெறாவிட்டாலும், நான் பெற்ற பெண்ணாகவே கருதுகிறேன். எனக்குப் பிள்ளை இல்லாதது உனக்குத் தெரியும்..."

"நான் பெண்ணிருக்கும்போது உங்களுக்கு என்ன கவலை அம்மா!..."யென்று கூறி மோகனா புன்னகை செய்தாள் அவள் புன்னகை, வன்னெஞ்சம் படைத்த ராணியைக்கூட வசப்படுத்தி விட்டது. அவளையும் அறியாமலேயே மோகனாவை அரவணைத்து நெற்றியில் முத்தமிட்டாள். இத்தருணத்தில் கமலம் ஏதோ அவசர வேலையாக வெளியில் சென்றாள். இச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராணி மீண்டும் பேச்சை ஆரம்பித்தாள்.

"என் செல்வமே!...உன்னிடம் அந்தரங்கமாகப் பேச நெடு நாளாக எண்ணியிருந்தேன்... அதற்கு இப்போதுதான் தருணம் கிடைத்தது"

"என்ன அந்தரங்கம் அம்மா?"

"இல்லை உன் விஷயமாகத்தான். அதுவே எனக்குப் பெருங் கவலையாயிருந்து கொண்டிருக்கிறது..."

"என் விஷயமாகவா?...அது என்ன கவலை?...அவ்வளவு பெரிய கவலையை உண்டு பண்ணக் கூடிய விதமாக நான் என்ன செய்தேன்?..."

'உன் விவாக விஷயமாகத்தான்!...உனக்கோ வயதாகி விட்டது...சீக்கிரத்தில் உனக்குக் கலியாணஞ் செய்துவைத்து. என் கண் குளிரப் பார்க்க வேண்டுமென்ற ஆசைதான்!...'

ராணி கலியாணப் பேச்சை யெடுத்ததும் மோகனா ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்தாள். அவள் உள்ளத்தில் ஆழ்ந்துகிடந்த சொக்கன் சொரூபம் மின்னொளிபோல் அவள் மனக்கண் முன் தோன்றியது. சொக்கனின் அழகும், இனிய புன்சிரிப்பும், அமுத வாக்கியங்களும், அந்நேரத்தில்கூட மோகனாவைப் பாவசப்படுத்தின. மோகனா சிறிது நேரம் அந்த எண்ணத்திலேயே மூழ்கியிருந்தாள் மோகனாவின் மௌனத்தைக் கண்ட ராணி, அவள் நாணத்தால் பேசாமலிருக்கிறாளென எண்ணி, "கண்ணி மோகனா! பெண்களுக்கு இது இயற்கைதான்...உன் தாயாகிய என்னிடம் நீ வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை" என்றாள். மோகனா திடுக்கிட்டு, "அம்மா... என்ன?...என்ன...சொன்னீர்கள்? நான் கவனிக்கவில்லை...' என்றாள்

"இல்லை கண்ணே, நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், நான் உன் தாயல்லவா?"

"தாய்தான் சந்தேகமென்ன?"

"அப்படியானால் தாய் சொல்லுகிறபடி நீ கேட்கத்தானே வேண்டும்?"

"சந்தேகமென்ன? நியாயமான எதற்கும் நான் கட்டுப்பட்டே தீருவேன்..."

"உன் கலியாண விஷயத்தில் வரனை நிச்சயிப்பது உன் தாயாகிய எனது கடமை...ஆமாம்...உன் அப்பாவுக்குத் தான் முதல் கடமை அப்புறம் நான் தானே?"

"எனக்கு வரனா?...நீங்கள் நிச்சயித்து விட்டீர்களா? யார்?... எப்போ?...எனக்கு...ஒன்றும்..."

"கண்ணே, நீ அறியாத ரகசியமென்ன? அதற்காகத்தான் நான் உன்னிடம் அந்தரங்கமாகப் பேச எண்ணினேன்..."

"அப்பாவுக்குத் தெரியுமா?..."

"அப்பாவுக்குத் தெரியாமலென்ன?...அப்பா விருப்பமும் அதுதான்!..."

"எதுதான்?...எனக்கு... என்ன?..."

"ஒன்றுமில்லை...நானோ குழந்தையற்றவள்......எனக்குப் பிள்ளைக்குப் பிள்ளையாயிருக்கிறவன்...என் சகோதரன்...அங்கப..."

"அம்மா போதும்!...போதும்!!. நிறுத்துங்கள்!..." என மோகனா அவள் கரங்களால் காதுகளை இறுக மூடிக்கொண்டாள். அவள் கண்கள் கலங்கின...ஒன்றும் தோன்றாமல் மிரள மிரள மேலும் கீழும் விழித்தாள். அவள் முகம் சோர்வடைந்தது. இந்நேரத்தில் வெளியிற்சென்றிருந்த கமலம் திடீரென அறைக்குள் வந்தாள். மோகனாவின் நிலைமையைக் கண்டு திடுக்கிட்டாள். மோகனா அருகில்சென்று,"அம்மா! ஏன் அழுகிறீர்கள்? உங்கள் முகம் வாட்டமுற்றிருக்கிறதே?" என்று கேட்டாள். மோகனா சட்டெனக் கண்ணீரைத் துடைத்துவிட்டு, "கமலம்... ஒன்றுமில்லை......எதையோ நினைத்துக்கொண்டேன்.......அவ்வளவுதான்...வேறு ஒன்றுமில்லை..." என்று தட்டுத் தடுமாறிப் பதில் கூறினாள் மோகனாவின்கண்ணீரைக் கண்ட ராணிக்குச் சகிக்க முடியவில்லை. அவள் மனதில் ஆக்ரோஷம் பொங்கி எழுந்தது. அவள் சகோதரன் அங்கப்பனின் பெயரைக் கூறியதும், மோகனா அந்தப் பெயரைக்கூட விரும்பாமல், வெறுப்பு

(அடுத்த பக்கம் பார்க்க)

கிறிஸ்மஸ்! கிறிஸ்மஸ்!! கிறிஸ்மஸ்!!!

கர்த்தர் பிறந்த பாவனையான, குடில் சுரூப செட்டுகள்
தேவதாய், குழந்தை சுவாமி, அர்ச். சூசையப்பர்,
குளோரியா, மூன்று இராஜக்கள், இடையர்,
ஆடுமாடுகள் முதலிய 18 எண்ணங்கள்.

	4½"	6½"	9"
செட் 1-க்கு ரூ	6-0-0	12-8-0	25-0-0

தேவதாய், சூசையப்பர், ருஜாக்கள், இடையர்,
சம்மனசு முதலிய தனிச் சுரூபங்கள்

	6½"	9"
ஒன்றுக்கு ரூ	1-4-0	2-4-0

பாலன் (குழந்தை சாமி) சுரூபங்கள்

	3"	3½"	4	5"	6"
ஒன்றுக்கு	0-6-0	0-8-0	0-12-0	1-0-0	1-8-0

முழங்காலிலிருந்து வணங்கும் சம்மனசுகள்

	3"	4"	5"	7"	12"
ஜதை ஒன்றுக்கு	0-12-0	1-0-0	1-8-0	4-8-0	15-0-0

கடுத்தத்தில் பலவர்ணங்களால் அச்சிடப்பட்ட
குடில்கள் மூடவும் திறக்கவும் கூடியது
ஒவ்வொன்றுக்கு 0-2-0 0-4-0 0-6-0 0-8-0 1-0-0

சுவாமி பிறப்பைக் காட்டக் கூடிய கார்டுகள்
டஜன் 1-க்கு 2 அணா, 3 அணா, 4 அணா,
6 அணா, 8 அணா, 12 அணா.
கிஃப்ட் போஸ்ட் கார்டுகள் ஒன்றுக்கு 2 அணா. டஜன் ரூ. 1-4-0
கிறிஸ்மஸ், புதுவருட சோபன கார்டுகள்,
பலரகங்களிலும் கிடைக்கும்.
டஜன் 1-க்கு 6 அணா, 8 அணா 12 அணா,
ரூ 1-0-0, 1-8-0 2-0-0,

இன்னும் வேண்டிய மற்ற விபரங்களுக்கு ¾ அணா ஸ்டாம்பு அனுப்பினால் கிறிஸ்மஸ் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

தாமஸ் ரோட்ரிகோ அண்ட் சன்ஸ்,
P. O. Box 1209. மதராஸ்.

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது

V. ARUMUGA CHETTY

விநாயகர் மார்க்கு சுருட்டுகள்

வ. ஆறுமுக செட்டியார், நெ. 13, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்

ராணி செய்த சூழ்ச்சி

(மூன் பக்கத்தொடர்ச்சி)

டன் காதுகளை அடைத்துக்கொண்டது ராணிக்குப் பொல்லாத கோபத்தை உண்டுபண்ணியது. எனினும், அந்த ஆக்ரோஷத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. "மோகனு, வருந்தாதே! உனது விருப்பத்துக்கு மாறாக ஒன்றும் நடக்காது...அப்புறம் வந்து பேசிக்கொள்ளுகிறேன்; போய்வரட்டுமா?" என்று அன்பு ததும்பக் கேட்டாள்.

ராணி இருப்பதிலும், அந்த இடத்தை விட்டு சீக்கிரம் போய்விடுவது நல்லதென எண்ணிய மோகனு, "போய்வாருங்கள்" என சட்டென விடை கொடுத்து அனுப்பிவிட்டாள். ராணியும் பற்களைக் கடித்துக்கொண்டு, வீராவேசத்துடன் அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

கமலம் இருவர் முகக் குறிப்பிலிருந்தே அவர்களுக்குள் என்ன பேச்சு வார்த்தை நடந்திருக்கலாமென ஒருவாறு யூகித்துக்கொண்டாள். அந்தப் பேச்சை யெடுத்தால் புண்பட்ட மோகனுவின் உள்ளத்தை இன்னமும் புண்படுத்தியதுபோலாகுமென்று எண்ணி, மோகனுவுக்கு உற்சாகத்தை உண்டு பண்ணும் வழியில் பேச்சைத் திருப்பினாள்.

"அக்காள்...பாட்டியை நெடுநேரமாக..."

"கமலம்! நாம் அப்பாவிடம் போய்விட்டு இப்பொழுதுதான் வந்தோம்; அதற்குள் பாட்டி வந்துவிட்டு போயிருக்கலாம்..."

"இருக்கலாம்; என்றாலும், பாட்டிக்கு என்ன வேலை? வீட்டிலிருப்பதினும் இங்கேயே காத்திருக்கலாமே என்றுதான் சொன்னேன்..."

"அடி கோள் சொல்லிக் கமலம்! இளவரசியிடம் என்னடி மூட்டை அவிழ்த்தாய்?" என்று கேட்டுக்கொண்டே பாட்டி, மோகனு அறைக்குள் நுழைந்தாள்.

"பாட்டி வா, வா, உன்னைத்தான் தேடிக்கொண்டிருந்தேன் ......நல்ல நேரத்தில் வந்தாய்..."

"ஆமடி! பாட்டியைக் கண்டால் ஒரு பேச்சு;...பாட்டியைக் காணவிட்டால் ஒரு பேச்சு;...கமலம், நீ பொல்லா விஷமம்!..."

"நான்தான் விஷமமே! உனக்கு விஷமம்!...மோகனுவுக்குப் பெரிய விஷமம்!! எல்லாரையும்விட அவள் ரஞ்சிதத்துக்கு இன்னமும் பெரிய விஷமம்!...ஏன்? அவளுக்கு நான் ஒரு விஷப் பாம்புக் குட்டி!...அவள் என் தலையை நசுக்கப் போகிறாளாம்! என்னமோ..."

"கமலம், ரஞ்சிதம் உனக்குச் சரியான பேர் கொடுத்தாடி! உனக்கு அவ்வளவும் தகும்!...போகட்டும். அவள் உன் தலையை நசுக்குவதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்...உன் தலை நசுங்கப் போகிறதோ?"

"பாட்டி இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்?"

"ஒன்றும் போகவில்லை...அது இருக்கட்டும்; நல்ல நேரத்தில் வந்தாயென்றாயே?..அது என்ன?"

"சும்மா சொன்னேன்...இருவரும் தனிமையாகவே உட்கார்ந்துகொண்டிருந்தோம்...பாட்டி வந்தால் பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருக்கலாமே என்றுதான் அப்படிச் சொன்னேன்."

"நீ சொன்னது சரிதான். நான் நல்ல நேரத்தில்தான் வந்தேன்" என்று கூறிவிட்டுப் பாட்டி குலுங்கக் குலுங்க சிரித்தாள். கமலமும், மோகனுவும் பாட்டி சிரிப்பின் அர்த்தத்தை அறியாமல் ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள். அவர்கள் விழிப்பதைக் கண்டு பாட்டி இன்னமும் நகைத்தாள். பாட்டி சிரித்தது கமலத்துக்குக் கோபத்தை உண்டு பண்ணிற்று.

"பாட்டி ஏன் அர்த்தமில்லாமல் சிரிக்கிறாய்? என்ன நடந்தது?... உள்ளதைச் சொல்லேன்..."

பாட்டி சிரிப்பை நிறுத்திக்கொண்டு, அறையின் பின் பக்கமாகத் திரும்பி பார்த்தாள். நாலா பக்கமும் சிறிது நேரம் கவனித்தபின் மெதுவாக பேச ஆரம்பித்தாள்.

"மோகனு, கமலம்...கேளுங்கள் நான் வழக்கம்போல் மோகனு அறைக்கு வந்தேன். அறையின் கதவு சாத்தப்பட்டிருந்தது. ஆனல், மெதுவாகத் தள்ளியதும் திறந்துகொண்டது. அறையில் நீங்கள் யாருமில்லை. நீங்கள் வெளியில் போனல், அறையைக் கட்டாயம் பூட்டி விட்டுப் போவீர்கள். கதவு திறந்திருந்ததற்கு காரணம் என்ன? நீங்கள் மறந்து விட்டுப் போயிருக்கலாமா வென்று யோசித்தேன். ஆனல், மோகனு படுக்கை அறைக்கு அடுத்த அறையில் ஏதோ ஒருவித அரவம் கேட்டது. நான் சந்தேகித்து மெதுவாக அங்கு சென்று உற்றுப் பார்த்தேன், அறையில் யாரிருந்தாரென்று நினைக்கிறீர்கள்? ...ரஞ்சிதம்!"

"ரஞ்சிதமா! ரஞ்சிதம் அங்கு எப்படி வந்தாள்?...அங்கே என்ன செய்தாள்?"

"எப்படி வந்தாளோ எனக்குத் தெரியாது. அங்கு ஏதேனும் விஷமம் செய்து விடுவாளென்று பயந்து நான் கூர்ந்து கவனித்தேன்...ஒரு புட்டியில் எதையோ ஊற்றினாள். ஆடைகளைச் சோதித்துப் பார்த்தாள்...இன்னமும் என்ன வேலைகளெல்லாமோ செய்து கொண்டிருந்தாள். இதற்குமேல் அவள் ஏதேனும் விஷமம் செய்து விடுவாளெனப் பயந்து அவளைக் காணாதது போல் "மோகனு!" என்று உன்னைக் கூப்பிட்டேன். திருடி ரஞ்சிதம் திக்கிட்டுப் போனாள்... "பாட்டி நானல்லவோ இருக்கிறேன்...இளவரசி அரசரிடம் போயிருக்கிறார். அவருக்கான ஆடைகளையும், வாசனைத் திரவியங்களையும் தயாரித்து வைக்கும்படி என்னிடம் கூறிவிட்டுப் போனார்" என்றாள். நானும் அவளிடம் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. அவள் திருடி என்று எனக்குத் தெரியாதா? அவள் வேலைகளைக் கூர்ந்து கவனித்தேன். சிறிது நேரத்தில் தன் வேலைகள் முடிந்து விட்டதாக என்னிடம் கூறிவிட்டுப் போகப் புறப்பட்டாள்.

(தொடரும்)

ஸ்ரீமான் 'மலையாள வைத்தியத்'' தலைவருக்கு நமஸ்காரம்

தங்களின் வைத்திய நிலையத்தில் தயார் செய்துவரும் மருந்துகளை 4 5 வருஷங்களாக நூற்றுக் கணக்கான பேர்களுக்கு வருத்திக் கொடுத்து யானும் சாப்பிட்டு வந்ததில் நோய் நீங்கி, பூர்ண குணமும் ஆரோக்கியமும் காணப்பெற்று வந்திருக்கிறோம். இவ்வுண்மையை விளக்கிக் காட்டுவதற்கு என் போட்டோவை அனுப்பியிருக்கிறேன் தங்கள் மருந்துகளினல் குணமடைந்த நூற்றுக் கணக்கான நண்பர்கள் இங்கு என்னை ஒரு பெரிய டாக்டர் என்ற மதிப்பையும் காட்டி வருகிறார்கள்.

இக்கீர்த்திப்பெற்ற மருந்துகளை Natal நெட்டால் South-Africa சுகர் மில்லிலுள்ள ஆயிரக்கணக்கான நண்பர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறேன். இக்கடிதத்துடன் $22\frac{1}{2}$ ஷிலிங்கு ''ஜீவானந்த ரஸாயனத்திற்காக'' அனுப்பியிருக்கிறேன். உடன் அனுப்பவும்.

இப்படிக்கு
P டோன்னுசாமி சேட்டியார், நெட்டால் (11-10-1938)

(முழு விவரங்களுக்கு)
இனம் ''சிற்றின்பசாகரம்'' புஸ்தகம் இனம்!!

ஜீவானந்த ரஸாயனம்

வாலிபம் இன்னதென்று அறியாமல், இரவு, பகலாக அறிவீனத்தினால் வேசியர்களின் சேர்க்கையாலும், மிதமிஞ்சிய போகத்தினாலும், ஹஸ்தப் பிரயோகம், மற்றும் செய்யத்தகாத பல செய்கைகளினாலும் ஆண்மையை இழந்து, வீரியம் குன்றி, பலயீனப்படும் புருஷர்களுக்கு ஜீவானந்த ரஸாயனம் சஞ்சீவி போன்றது.

பூர்ண குணத்திற்கு 2 சேர் போதும் பத்தியமில்லை.

2 சேர் புட்டி 1க்கு ரூ. 3-8-0 1 சேர் புட்டி 1க்கு ரூ. 2-0-0

இந்தியாவுக்கு:—தபால் செலவு 2 சேர் 1க்கு அணா 13.
... ... 1 சேர் 1க்கு அணா 8.

மருந்தின் கிரயமும், தபால் செலவும் சேர்த்து முன்பணமும் அனுப்பலாம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லை.

விலாசம்:— மலையாள வைத்திய நிலையம்,
தபால் பெட்டி, நெ. 53 மதராஸ். (T M)

ஆபீசுக்கு நேரில்வர விரும்புவோர்
நெ 2-66 கோணத் தெரு என வழங்கும் காளத்தியப்ப முதலி தெரு சமீபம் புது மார்க்கெட், சூளை மதராஸ்.



மணத்திலும் குணத்திலும் சிறந்தது
நீபா
(வேப்பம், நீம், மார்கோஸ)
சோப்
GANGA WORKS. ADYAR. MADRAS.
நெ. 1-64, தங்கசாலை தெருவு, பி. டி. மதராஸ் (ஏஜண்டுகள் தேவை

டிரேட்மார்க்குகள் பெயர்கள்
லேபில்களை
கல்கத்தா ரிஜிஸ்டர்
AGENTS ஜி.எ.ஓர்ச.ஸ
செய்ய 6. பந்தர் தெருவு மதராஸ்.

! சீனா வெற்றி பெறுமா? !

ஜப்பான் - தத்தளிக்கிறது

சீன-ஜப்பான் யுத்தப் போக்கைக் கண்டு பலருக்குப் பலவிதமான சந்தேகங்கள் ஏற்படுகின்றன. சீனா வெற்றி பெறுமா? வெற்றி பெறாது. ஜப்பானுக்கே வெற்றி கிடைப்பது நிச்சயமெனப் பலர் கருதுகிறார்கள். ஆனால், சீன-ஜப்பான் யுத்த நிலைமையை நேரில் கண்டுவந்த சில மேனாட்டு நிபுணர்கள் கூறுவதிலிருந்து, இறுதியில் சீனாவுக்கே வெற்றி கிடைக்குமென்று தெரிகிறது. ஜப்பான், அதின் ஆயுத பலத்தால், சீனாவில் பல பிரதேசங்களைக் கைப்பற்றியிருக்கலாம். ஆனால், ஜப்பானின் வெற்றி நீடித்திருக்காது. சீக்கிரத்தில் அது சோர்வடைந்துவிடும் அந்தத் தருணத்தையே சீனர் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் சீனர் ஒன்று திரண்டு ஜப்பானை அடியோடு முறியடித்துவிடுவார்கள்.

சீன-ஜப்பான் யுத்தத்துக்கு ஒரு முடிவு உண்டா? முடிவு உண்டென்றால் வெற்றி யாருக்கு? சீனாவுக்கா, ஜப்பானுக்கா? ஜப்பான் முன்னேறிச் செல்லும் வேகத்தைக் கவனித்தால், ஜப்பானுக்கே வெற்றி கிடைக்குமென்று தெரிகிறது. ஆனால், ஜப்பானுக்கு வெற்றி கிடைக்கப் போவதில்லை; சீனாவுக்கே இறுதியில், வெற்றி கிடைக்குமென்று ஐரோப்பிய யுத்த நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் காரணங்களும் கவனிக்கத் தகுந்தவைதான். ஜப்பானின் நிலைமை அதற்குத் தெரியும். யுத்தத்தை நீடித்து நடத்த ஜப்பானால் முடியாது. என்றாலும், சீனாவை எப்படியும் ஜெயித்துவிட வேண்டுமென்ற பேராசை ஜப்பானியருக்கு இருக்கிறது. அதற்காகவே, அவர்கள் ஜெயித்த இடங்களில் பொம்மை சர்க்கார்களை ஏற்படுத்தி வருகின்றனர். அந்த பொம்மை சர்க்காரை ஏற்றுக்கொள்ளுவார் யாரையும் காணோம். அந்த சர்க்கார்களைக் கொண்டு, சீன சர்க்காரிடம் பேரம் பேச எண்ணினார்கள். பிரிட்டிஷாரைத் தூதாக அனுப்பி, சீன சர்க்காருடன் சமரசம் பேச ஜப்பானியர் நினைத்தார்கள். ஆனால், சீன சர்க்காரின் தலைவரான ஷியாங்-கே-ஷேக் அதற்கு உடன்பட மறுத்துவிட்டார். சீனாவில், ஒரு சீனன் உயிரோடிருக்கும் வரையில் மானங்கெட்ட நிபந்தனைகளுக்கோ, சமரசத்துக்கோ சீனர் ஒருபோதும் உடன்படமாட்டார்களென்பதை அவர் தெளிவாகக் கூறிவிட்டார்.

சீனத் தலைவர் மார்ஷல், ஷியாங்-கே-ஷேக்கும் அவருடைய ராணுவ படைத்தளகர்த்தர்களும். ஜப்பானை எந்த விதத்திலும் முறியடித்துத் தீருவதென இவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள்.

தீவிரப் போர்

இத்துடன் ஜப்பானியர் சமாசத்தில் நம்பிக்கை இழந்தனர். தீவிரமாகப் போரை நடத்த முற்பட்டார்கள்; ஜப்பான் யுத்த மந்திரி ஜெனரல் ஷெகிஷிரோ இதற்காக யுத்தஞ் செய்வதில் பிடிவாதமாக இருக்கிறார். ஜப்பான் தனவந்தர்களும், வர்த்தகர்களும் யுத்த வெறி கொண்டிருக்கிறார்கள். ஆசியாவில் ஜப்பானே தலைமை வகிக்க வேண்டுமென்பது அவர்கள் கருத்து. ஆசியாவாசிகளை ஈடேற்றும் பொறுப்பைக் கடவுள் அவர்கள் தலையிலேயே சுமத்தியிருப்பதாக அவர்கள் எண்ணியிருக்கிறார்கள்! ஜப்பானுக்கு இப்போதுள்ள கஷ்டத்தைப் பொருட் படுத்தாமல் யுத்தத்தைத் தீவிரமாகநடத்தி, சீனாவை ஜெயித்துவிட்டால், சீனாவின் மூலப் பொருள்களைக் கொண்டு ஜப்பான் அதின் செல்வத்தையும் கைத் தொழிலையும் இன்னம் பன்மடங்கு அபிவிருத்தி செய்துகொள்ளலாமென்பது அவர்கள் எண்ணம். ஆனால், ஜப்பானிலுள்ள நடுத்தர மக்களுக்கோ சீன-ஜப்பான் யுத்தத்தில் நம்பிக்கை இல்லை. அவர்களில் பெரும்பான்மையோர் யுத்தத்தை வெறுக்கின்றனர். ஏனெனில், இந்த யுத்தத்தால் கஷ்டப்படுகிறவர்கள் நடுத்தர வகுப்பினரும், ஏழைகளும். ஜப்பானில் ஆகாரப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், கோடிக்கணக்கான மக்கள் ஆகாரத்துக்குத் திண்டாடுகிறார்கள். உடுக்கப் போதிய உடை கிடையாது; தோல் சப்பாத்து அணிந்து வந்தவர்கள்கூட, இப்பொழுது கட்டைச் செருப்புகளையே அணிய வேண்டியிருக்கிறது. புதுப் பள்ளிக்கூடங்கள் கட்டுவதில்லை. புதிதாக டெலிபோன்களைக்கூட வைப்பதில்லை. மோட்டார் பஸ் முன்போல் ஏராளமாக ஓடுவதில்லை. பஸ்களுக்கும், கார்களுக்கும் உபயோகிக்கும் எண்ணெய் பெட்ரோலைக்கூடக் கட்டுப் படுத்திவிட்டார்கள். ஜப்பானியர், ஜப்பான் ஏழை மக்களை ஏமாற்றி, யுத்தத்தை நடத்தி வருகிறார்கள். சீன-ஜப்பான் யுத்தத்தை ஜப்பானியர் வேண்டுமென்று ஆரம்பித்தார்களென்று அவர்கள் சொல்லவில்லை சீனரே, ஜப்பானியரை வலுவில் சண்டைக்கிழுத்ததாக ஜப்பானில் பொய்ப்பிரசாரஞ்செய்து வருகிறார்கள். இதற்கு மேனாட்டினரே காரணமென்று சொல்லி ஜப்பான் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

உணவுக்குத் திண்டாட்டம்

தோல்வி நிச்சயம்

இவ்விதமாக ஜப்பானிலேயே, ஜப்பானியருக்கு எதிர்ப்பு இருக்கிறது ஜப்பான் ராணுவத்தை ஜப்பானியர் ஆதரிக்கவில்லை. சீன-ஜப்பான் யுத்தத்தில் ஜப்பானியர் தோல்வியடைவது நிச்சயம். இதை 1933-ம் வருடத்திலேயே பேர்பெற்ற ஆசிரியர் எச். ஜி. வெல்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். இனிமேல் ஜப்பானியர், சீனாவுக்கு நிபந்தனை விதிக்க முடியாது சீனாதான் ஜப்பானியருக்கு நிபந்தனை விதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஜப்பானியர் பெரும்பாலும், அவர்களுடைய கடற்படை உதவிகொண்டு சீனக் கடற்கரையோரங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அங்கிருந்துகொண்டு ஜப்பானின் ஆகாயப்படை உதவியால் சீனாவில் முன்னேறி வருகிறார்கள். ஆனால், உள்நாட்டுப் பிரதேசங்களில் ஜப்பானியர் அவ்வளவு தீவிரமாக முன்னேற முடியவில்லை. ஜப்பானியா கடற்கரைப பிரதேசங்

(அடுத்த பக்கம் பார்க்க)

சீனாவில் ஜப்பானியர் பிடித்திருக்கும் பிரதேசங்களைப் படத்தில் காண்க. இப் பிரதேசங்களில் ஜப்பான் பொம்மை சர்க்கார்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அந்தப் பொம்மை சர்க்கார்களை ஏற்றுக் கொள்ளுவார் யாருமில்லை.

(முன் பக்கத் தொடர்ச்சி)

சீனைக் கைப்பற்றுவதால் சீனவுக்கு அதிக நஷ்டம். வெளிநாட்டு வர்த்தகம் தடைப்படுவது உண்மையே ஆனால், இது காரணமாகச் சீனவை, ஜப்பானியர் மடக்கிவிட முடியாது. சீனர் நஷ்டமடைந்தபோதிலும், அதைப் பிரமாதமான நஷ்டமென்று குறிப்பிட முடியாது

புதிய பலம்

சீனருக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைச் சீனர் உணருகிறார்கள். ஆகவே, சீனர் உள்நாட்டு விவகாரங்களில் அதிகமாகக் கவனிக்கமுற்பட்டிருக்கிறார்கள். சீன விவசாயத்தில் அதிகக் கவனஞ் செலுத்தி, சீனர் வருமானத்தை அதிகரிக்கத் துணிந்திருக்கிறார்கள். யுத்தத்துக்காக ரயில் வேக்களையும், ரோடுகளையும் அபிவிருத்தி செய்திருக்கின்றனர் இதனால் சீனரிடம் அதிக ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஒற்றுமை இன்னமும் வரவர அதிகரித்து வருகிறதேயொழியக் குறையக் காணோம். சீனரிடையே ஒரு புதிய பலம் ஏற்பட்டிருக்கிறதென்று கூறலாம். சீனர் பல பிரிவினையாகப் பிரிந்து இதற்குமுன் ஒற்றுமையின்றி இருந்து வந்தார்கள் இப்பொழுது ஜப்பான் அக்கிரமமாக ஆரம்பித்திருக்கும் யுத்தமானது, சீனரிடையே ஒருவித விழிப்பையும், ஆக்ரோஷத்தையும் உண்டுபண்ணி விட்டது சீனவுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை சகல சீனர்களும் உணர ஆரம்பித்து விட்டனர். சீனரிடையே இருந்து வந்த அபிப்ராய பேதங்களை ஒழித்து பொது எதிரியான ஜப்பானை முறியடிப்பதிலேயே சீனர் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர். சீனரிடம் போதிய யுத்த தளவாடங்கள் இல்லையென்பது பொய்யே. பெரிய பீரங்கிகள், டாங்கிகள், யுத்த விமானங்கள் முதலியனவற்றை வெளி தேசங்களிலிருந்தே எதிர்பார்க்கின்றனர். ஆனால், சிறு யுத்த தளவாடங்கள், அதாவது, துப்பாக்கி, வெடி மருந்து, துப்பாக்கிக் குண்டுகள் முதலியனவற்றைச் சீனர் சீனவிலேயே உற்பத்திசெய்து வருகிறார்கள். அதற்காக ஏராளமான தொழிற்சாலைகளை பல விடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள்.

சீனர் வீராவேசம்

ஜப்பானியரிடம் யுத்த தளவாடங்கள் ஏராளமாக இருக்கலாம். ஆனல், சீனரிடமும் ஜனத்தொகை ஏராளம். ஜப்பானியரை விட சுமார் 8 மடங்கு அதிகமான சீனர், யுத்தகளங்களில் வீராவேசத்துடன் சண்டை செய்து வருகிறார்கள். ஒரு சீனனைக் கொல்ல, ஜப்பானியர் சுமார் 5 டாலர் செலவு செய்யவேண்டியிருக்கிறது. சீனருக்கோ அந்தச் சிலவே கிடையாது சீனர் செலவின்றி யுத்தத்தை நடத்திக்கொண்டு போகிறார்கள். ஜப்பானியருக்கு அபாரமான செலவு. சீன-ஜப்பான் யுத்தம் இன்னும் சிறிது காலத்துக்கு இப்படியே நீடித்து நடக்குமேயானல், ஜப்பான் வறுமையடைந்து, இன்ஸால்வெண்டாகவேண்டியதுதான் சீனர் அந்தத் தருணத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் இனிமேல் யுத்தத்தை நடத்த முடியாத நிலைமைக்கு வந்ததும், ஜப்பானியரை முறியடித்து ஜெயிக்க சீனர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றில் ஜப்பானியரை முறியடிக்க வேண்டும்; அல்லது, சீன அடியோடு அழியவேண்டுமென்ற உறுதியுடன் சீனர் சண்டை செய்து வருகிறார்கள். ஆகவே, உறுதியுள்ள சீனருக்கு இறுதியில் வெற்றி கிடைத்தே தீருமென்று சொல்லலாம்.

* * நவாப் T. S. ராஜமாணிக்கம்-கம்சன் * *

ஒவ்வொரு நகரிலும் தினசரி மாதக் கணக்கில்
நடைபெற்றது. சினிமாவைவிடச் சிறந்த காட்சிகள்:
க்ஷணத்தில் மாறித் தோன்றும் டர்னிங் சீன்கள்
புதிய சீன்கள்-புதிய உடைகள்-
இவற்றுடன் கூடிய

மதுரை தேவி பால
விநோத சங்கீத
சபையாரின்

5-வயதும் நிறையாத சிறு குழந்தை
பாலகிருஷ்ணன்

தலைமை வாய்ந்த
நாடகமாகிய

: ஸ்ரீ. கிருஷ்ண லீலா :

சென்னை
ராயல் தியேட்டரில்

2-12-38
வெள்ளி முதல்
பிரதிதினமும்
செவ்வாய், வியாழன், சனி
இரவு 9-30-மணிக்கும்
மற்ற நாளில் மாலை 5-30 மணிக்கும்
நடைபெறும்.



சிறைச்சாலை, காளிங்கர்த்தனம், ஜலக்ரீடை,
ராஜக்ரீடை, கம்சன் கனவு, தங்கரதம் முதலான
அதிஅற்புதக் காட்சிகள் மனப்பிரமிப்பையளிப்பன.

நவாப்-T. S. ராஜமாணிக்கம்-புரொப்ரைட்டர்

கிளிப்பேச்சு

பழைய கருப்பனே! - -
- மோதிரக் கை குட்டு!
சி. பி. க்கு முத்தண்ணா! -
- - வந்தே மாதரக் கிலி
முந்திரிக் கொட்டை "சர்"கள்!

கிளியே, இவ்வாரம் விசேஷங்கள் என்ன?

விசேஷங்கள் பல உண்டு முதன் முதலில் காந்திஜியின் நிலைமையைப்பற்றிக் கூறுகிறேன். காந்திஜி சுகமே இருக்கிறார். வார்தாவில் இம்மாதம் 11ந் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட விருப்பதால், அவர் பல முக்கியமான விஷயங்களைப் பற்றித் தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறார். என்றாலும், அவரிடம் யோசனை கேட்க வருபவர்கள் தொகை குறைவில்லை. பாபு ராஜேந்திரர் சுகமில்லாமலிருக்கிறார் அவரும் கொஞ்சங்கொஞ்சமாகக் குணமடைந்து வருவதாகக் கேள்விப்பட்டேன். தள்ளாத வயதில் சுகவீனமாயிருந்த பண்டித மாளவியாவும் பூரண குணமடைந்து காசிக்குத் திரும்பிவிட்டார். ராஷ்ட்ரபதி சுபாஷ் பாபு பாஞ்சாலத்தில் யாத்திரை செய்து வருகிறார் அவரை ஹிந்துக்களும், முஸ்லீம்களும் சிறப்பாக வரவேற்று உபசரித்து வருகிறார்கள். சுபாஷ் பாபு போகுமிடங்களிலெல்லாம் முஸ்லீம் மக்களைக் காங்கிரஸில் சேரும்படி தூண்டி வருகிறார். மாலஸ்தினத்திலும், எகிப்திலும் முஸ்லீம் மக்கள் சுதந்திரத்திற்காகப் போராடி வரும்போது, இந்திய முஸ்லீம் மக்கள் இந்திய சுதந்திரத்திற்காக ஏன் தீவிரமாகப் போராடக் கூடாது? காங்கிரஸ் சிறுபான்மையான மக்களுக்கு அநீதி செய்யுமென்ற எண்ணமே வேண்டாம். சிறுபான்மையான மக்களின் உரிமைகளைக் காங்கிரஸ் பாதுகாத்தே தீரும். அதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். முஸ்லீம் மக்கள் ஏராளமாகக் காங்கிரசில் சேர்ந்து காங்கிரஸைக் கைப்பற்ற வேண்டும். காங்கிரசில் முஸ்லீம் மக்கள் ஏராளமாக இருந்தால், முஸ்லீம்களின் நல உரிமைகளை எளிதில் பாதுகாக்க முடியும் இஸ்லாத்துக்கு ஆபத்து, காங்கிரஸ் இந்துக்கள் ஸ்தாபனமென்ற பேச்சுக்கே இடமிருக்காது. ஹக், ஜின்னா, சிக்காந்தர்கள் உறுமலும் நின்றுவிடும் அவர்கள் சிங்கப், புலி, கரடிகளைப் போல் தள்ளுவதை நிறுத்திப் பூனைகள் போல பதுங்கிவிடுவார்களென்பதில் சந்தேகமில்லை.

மெய்தான்; காங்கிரஸ் பலம் பெறும்; சுயராஜ்யமும் அதி சீக்கிரத்தில் கிடைத்துவிடும்.

சந்தேகமென்ன? காங்கிரசில் முஸ்லீம் மக்கள் ஏராளமாகச் சேர்ந்தால் ஹிந்து-முஸ்லீம் என்ற பிரச்னை எளிதில் தீர்ந்துவிடும். இனிமேல், ஹிந்து-முஸ்லீம் என்ற பிரச்னைக்கே இடமிருக்காது. முஸ்லீம் மக்கள் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாக காங்கிரசில் சேருவதால் முஸ்லீம் மக்களுக்கு நஷ்டமில்லை; அவர்களுக்கு லாபமே. பம்பாய் மராமத்து மந்திரி, எம். ஓய் நூரி ஆமதாபாத்தில் பேசியது, முஸ்லீம் மக்களை விழிப் டையச் செய்யுமென்று நினைக்கிறேன். "இஸ்லாத்துக்கு ஆபத்து வந்து விட்டதெனக் கூறுவோர் பேச்சை நம்பாதீர்கள். அது சுத்தப் பொய்; எப்பேர்ப்பட்டவராலும் இஸ்லாத்துக்கு அபாயம் விளைக்க முடியாது. அப்படி அபாயம் விளைவிக்க முடியுமென்று முஸ்லீம் மக்கள் கருதுவார்களேயானால், அவர்களுக்கு இஸ்லாத்தில் உறுதியான நம்பிக்கை இல்லையென்றே கூறுவேன். மேலும், சுதந்திரம் என்ற உண்மையை உலகத்துக்குப் போதித்தது இஸ்லாம் மதம். ஆகவே, இந்திய சுதந்திரத்துக்காகப் போராட வேண்டியது இந்திய முஸ்லீம்களின் கடமையாகும். வீணாக நமக்குள்ளேயே சண்டைகளை விளப்பிக் கொண்டிருக்க வேண்டாம். அது நமக்கும் கேடு, நமது தேசத்துக்கும் கேடு" என்றார் மந்திரி நூரி. இது ஜின்னா ஹக்குகளுக்கு நாராசம் போலிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால், நூரியின் சங்கநாதம் எட்டு திக்கிலும் ஒலித்து, முஸ்லீம் மக்களைத் தட்டி யெழுப்புமென்றே நினைக்கிறேன். முஸ்லீம் மக்கள் நூரியின் வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பார்களாக.

ஆமாம், முஸ்லீம் மக்கள் நூரியின் வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பார்களென்பதில் சந்தேகமில்லை. முஸ்லீம் மக்கள் விழிப்படையும் காலம் நெருங்கிவிட்டது.

மெய்; ஒற்றுமைச் சூரியன் உதயமாகிவிட்டது. அந்தச் சூரியனை மறைக்கவும் முடியாது, இனிமேல் தடுக்கவும் முடியாது லீக்காரருக்கு இனிமேலாவது புத்தி வருமென்று நினைக்கிறேன். அவர்கள் லீகைக் கட்டி அழுவதிலும், காங்கிரசில் சேர்ந்து, காங்கிரசைக் கைப்பற்றி முஸ்லீம்களின் உரிமைகளுக்குப் போராடுவதே சாலச் சிறந்தது. காங்கிரசில் எத்தனையோ முஸ்லீம் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முஸ்லீம்களின் உரிமைகளுக்காகப் போராடவில்லையா? அந்த உரிமைகளை அநுபவிக்கவில்லையா? அவர்கள் மூளையில் படாத அபூர்வ உரிமைகள் லீக் தலைவர்கள் மூளையில் மட்டும் எப்படி ஜோதியாக பிரகாசித்துவிட்டன?

ஜோதி ஒன்றும் பிரகாசிக்கவில்லை; எல்லாம் தலைவர் பதவி ஜோதியில்தான் வந்து நிற்கிறது. அது போகட்டும்; சமஸ்தானங்கள் நிலைமை எப்படி இருக்கிறது?

பழைய கருப்பனே கருப்பன்! அதிகார வெறியிலும், ஏதேச்சாதிகாரத்திலும் ஊறிப்போய்க் கிடந்த சமஸ்தான மன்னர்களுக்கு, பிரஜைகளுக்கு பொறுப்பாட்சி கொடுப்பதென்றால் அது கசப்பாக இருக்கிறது. விளக்கெண்ணெய் சாப்பிடுகிறமாதிரி மூக்கைப் பிடித்துக்கொண்டு விழுங்குகிறார்கள். ராஜ்கோட்டில் ஏற்பட்ட கிளர்ச்சி, சர்தார் பட்டேலின் முயற்சியால் சமரசமேற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. சமரசம் செய்து வைப்பதில் காந்திஜிகூட அதிக ஊக்கம் காட்டினார். பட்டேலும், ராஜ்கோட் திவான் சர். பாட்ரிக் காடலும் கலந்து பேசினார்கள் பொறுப்பாட்சி சாரங்கூடக் கொடுக்கமுடியாதென காடல் திமிருடன் கூறினார். அத்துடன் சமரசம் முறிந்தது. ராஜ்கோட்டில் தீவிரமான போராட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இந்தப் போராட்டத்துடன் ராஜ்கோட் திவானும், மன்னரும் தோல்வியடைவது திண்ணம். அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தைக்கூட அவர்கள் கை நழுவவிட்டு விட்டார்கள். குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்! தோல்வியடைந்து அவமானத்தைத் தேடிக்கொள்ளுவதிலும், பட்டேல் சமரச முயற்சிப் போர்வையில் மறைந்து தப்பித்துக்கொண்டிருக்கலாம்; அந்தப் புத்திகூட ராஜ்கோட் திவானுக்கு ஏற்படவில்லை. இவர் திருவாங்கூர் திவான் சர். சி. பி. ராமசாமி ஐயருக்கு முத்தண்ணாவாக இருக்கிறார். சி. பி. க்கு தோல்வியென்றால் வேப்பங்காய். ஆகவே, பகிரங்க தோல்வியை எப்படிச் சமாளிப்பதென்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தார். அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. திருவாங்கூர் மகாராஜா பிறந்தநாள் கொண்டாட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, அடக்கு முறையை நிறுத்தினார்; சிறைப்பட்ட எல்லோரையும் விடுதலை செய்தார். அத்துடன் கப்சிப்பென்று வாயை மூடிக்கொண்டார். திருவாங்கூர் போராட்டம் அசையாமல் நிற்கிறது. மேற்கொண்டு நடப்பதற்குமில்லை; அதை நிறுத்துவதற்குமில்லை. திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர்களுக்கு இது பரம சங்கடமாக வந்து முடிந்தது. போராட்டத்தைத் தீவிரமாக நடத்த உத்தேசித்திருக்கிறார்கள். வரிகொடா இயக்கத்தை ஆரம்பிக்கலாமாவென்று யோசனை போட்டு வருகிறார்கள்.

அப்படியா? வரிகொடா இயக்கம் ஆரம்பித்துவிட்டால், அப்புறம் சி. பி. தலைசாய வேண்டியதுதான். அதற்குள்ளாக அவர் சமரசத்துக்கு ஒரு வழியை உண்டுபண்ணி விடுவாரென்றே நினைக்கிறேன். இதர சமஸ்தானங்கள் நிலைமை எப்படி இருக்கிறது?

ராஜஸ்தானில் போராட்டம் நிற்கவில்லை. போராட்டத்தை தீவிரமாக நடத்த 700 தொண்டர்கள் தயாராக இருக்கிறார்கள். தென்கானல், கோலாப்பூர் முதலிய சமஸ்தானங்களிலும் போராட்டம் தீவிரமாகவே இருக்கிறது. மன்னர்கள் விட்டுக்கொடுக்க மறுத்து, அடக்குமுறையில் உறுதி கொண்டிருக்கிறார்கள் பண்டித ஜவார்லால் நேரு, காந்திஜி முதலிய பெரிய தலைவர்கள் இந்த நெருக்கடியில் தலையிடக்கூடிய நிலைக்குச் சமஸ்தானங்களின் நிலைமை முற்றிவிட்டது. மன்னர்களின் குருட்டுப் போக்கைத் தடுத்து உடனே முட்டுக்கட்டை போடாவிட்டால், நிலைமை விபரீதமாக வந்து முடியுமென்றே நினைக்கிறேன்.

ஆமாம், மன்னர்களுக்குக் கிரக பலன் சரியாக இல்லை. அவர்களுக்கு இது சனி திசை. இந்தக் காலத்தில் அவர்கள் தலைவிதி எப்படி முடியப்போகிறதோ தெரியவில்லை! வேறு விசேஷம் உண்டா?

ஆமாம்; சமஸ்தான மக்கள் எப்படிக் கண் விழித்துப் பொறுப்பாட்சிப் போராட்டத்தை நடத்த முன் வந்திருக்கிறார்களோ, அதேபோல், தொழிலாளர்களும், மாணவர்களும் அவர்கள் உரிமைப்போராட்டத்தை ஆரம்பித்துவருகிறார்கள். நாள் தவறினாலும், தொழிலாளர் வேலை நிறுத்தம், மாணவர்கள் வேலை நிறுத்தச் செய்தி தவறுவதில்லை. எல்லாம் பாழாய்ப்போகிற இந்தக் காங்கிரஸ் செய்த வேலை! ஹைதராபாத் ஊஸ்மானிய கலாசாலை ஹிந்து மாணவர்கள் விடுதியில் "வந்தே மாதரம்"

(அடுத்த பக்கம் பார்க்க)

கிளிப்பேச்சு

(முன்பக்கத் தொடர்ச்சி)

பாட்டுப் பாடினார்களாம்! அதற்காக ஹிந்து மாணவர்களுக்குக் கல்தா. இது சுமார் 400, 500 ஹிந்து மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் வந்து முடிந்திருக்கிறது. சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையிலும் வேலைநிறுத்தம். இவ்வாறு எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தத் தூக்கும், மறியலுக்கும் பஞ்சமே இல்லை. சுயமரியாதைக்காரரும், திண்ணை தூங்கிகளும் சென்னையில் செய்யும் கலாட்டா கொஞ்சமா? அப்படியிருக்கப் படித்த மாணவர்கள் வேலை நிறுத்தஞ் செய்வதில் ஆச்சரியமென்ன விருக்கிறது? சென்னை அசெம்பிளியைப் பிடித்த வந்தேமாதரக் கிலி, நிஜாம் சர்க்காரைக் கூடப் பிடித்தாட்டிவைக்கிறது; பாவம்!

பாவந்தான்! ஹிந்து மாணவர்கள் வந்தே மாதரம் பாடுவதால் கலாசாலைக்கு என்ன ஆபத்து! இமயமலை சரிந்து விடுமென்று கலாசாலை அதிகாரிகள் எண்ணினார்கள் போலும்! வேறு விசேஷமென்ன?

சென்னை அசெம்பிளிக் கூட்டம் ஆரம்பித்து விட்டது. பல மசோதாக்களை காங்கிரஸ் மந்திரிகள் கொண்டு வந்திருக்கிறார்கள். முனிசிபல் திருத்த மசோதா, சுகாதார மசோதா, சென்னை மதுவிலக்குச் சட்டத் திருத்த மசோதா, தறைமுக நிதி மசோதா முதலிய பல மசோதாக்கள் கொண்டு வந்து, அவற்றில் சிலவற்றைத் தனிக் கமிட்டி பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். எதிர்க் கட்சியிலிருக்கும் "சர்களும், திவான்பகதூர்களும்," மசோதாவிலுள்ள குற்றங் குறைகளை நியாயமாக எடுத்துக் காட்ட முன் வரவில்லை. காங்கிரஸ் மந்திரிகள் கொண்டுவரும் மசோதாக்களை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் எதிர்க்கிறார்கள். எதற்கும் நான் முந்தியென முந்திரிக் கொட்டை மாதிரி, சர். பன்னீர் செல்வமும், ஹமீத்கானும் துள்ளிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் பேசுவதிலாவது சாரமிருக்கிறதா? அதுவும் கிடையாது. அவர்கள் சட்ட சபையில் பேசி, ஏதோ பிரமாதமாகச் சாதித்து வருவதாக வெளிக்குக் காட்டிக் கொள்ள எதையாவது உளறிக் கொட்டுகிறார்கள். முட்டாள் பட்டம் கொடுத்தாவது பத்திரிகைகளில் அவர்கள் பெயர் அடிபடுமல்லவா? இந்தப் அதிகப்பிரசங்கிகளுக்கு அதுவொரு திருப்தி.

மெய்தான்; எதிர்க்கட்சியாருக்கு வேலையில்லை கிழவிகள் மெச்சிக்கொள்ள ஏதாவது பேசித் தொலைக்க வேண்டுமே! காங்கிரஸ் மந்திரிகள் கொண்டுவந்த மசோதாக்களின் கருத்தென்ன?

உதாரணமாக தறைமுக நிதி மசோதாவை எடுத்துக்கொள்ளுவோம். தறைமுக நிதியில் சுமார் 60 லக்ஷம் ரூபாய் பயனற்றுக் குவிந்திருக்கிறது. தறைமுக நிதிக்கு 5 லக்ஷம் ரூபாயை ஒதுக்கி விட்டு, சுமார் 55 லக்ஷம் ரூபாயை சர்க்கார் நன்மையான காரியத்துக்கு உபயோகிக்கச் சட்டங் கொண்டுவந்திருக்கிறார்கள். இதில் தவறு என்ன இருக்கிறது? அதை கொள்ளை, திருட்டு. என ஐரோப்பியர்கூட எதிர்க்க முன்வந்துவிட்டார்கள். சுகாதார மசோதாவை டாக்டர். ராஜன் கொண்டுவந்தார் அதற்கும் எதிர்ப்பு சென்னை மதுவிலக்குச் சட்டத்திற்கு ஆச்சாரியாரே ஒரு திருத்தம் கொண்டுவந்தார். மதுவிலக்குச் சட்டத்தின் 4-வது விதி, 16-வது ஷரத்தின் கீழ், "புராதன வழக்கத்தின் பிரகாரம் எந்தச் சரியான மதச் சடங்கிற்கும் வேண்டிய சாராய வகைளை வைத்திருக்கவும், நபர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரால் "அதிகாரம்" அளிக்கவும் மாகாண சர்க்கார் தகுந்த ஏற்பாடு செய்யலாம்" என்ற திருத்தத்தையே ஆச்சாரியார் கொண்டுவந்தார். "அதிகாரம்" என்றிருக்கும் பதத்துக்குப் பதிலாக முன்னல், "அனுமதி" என்றிருந்தது. இந்த வார்த்தை இழிவுபடுத்தக்கூடியதாக இருக்கிறதென்று கத்தோலிக்கர் ஆட்சேபனை செய்தனர். ஆச்சாரியார் அந்த "அனுமதி"யை மாற்றி அதிகாரம் கொடுத்திருக்கிறார். கத்தோலிக்கர் மதச் சடங்குக்கு முக்கியமாக வேண்டியது திராட்சை ரசம். அந்த ரசத்துக்கு சர்க்கார் ஒரு இடையூறும் செய்யவில்லை. கத்தோலிக்க குருக்களுக்குத் திராட்சை ரச உபயோகிக்கும் உரிமை பூர்ணமாகக் கொடுத்திருக்கிறது. ஆனல், அந்த ரசத்தை வேறு உபயோகத்துக்குப் பயன் படுத்தக்கூடாதென்பதே சட்டத்தில் கட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் இதில் சங்கடம் ஒன்றுமில்லை. என்றாலும், கத்தோலிக்கர் இதில் பூர்ண விலக்குக் கேட்டிருக்கிறார்கள். வேறு எந்த மாகாண சர்க்காரும் இதில் பூர்ணவிலக்கு கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனல், சர். பன்னீர்செல்வமும் அப்பாதுரைபிள்ளையும், ஏதோ அவர்கள் இருவருமே கிறிஸ்துவர்களுக்காகப் பாடுபடுவதைப் போல் பிரசங்கஞ் செய்தார்கள். பம்பாயிலும், பீகாரிலும் ஏற்பட்டிருக்கும் மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துக் காட்டினார்கள். அங்கு ஏற்பட்டிருக்கும் சட்டங்களுக்கும், சென்னை சட்டங்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. அப்படியிருக்க இந்த இரு கிறிஸ்துவ வீரர்களும் எந்த மூளையைக் கொண்டு இந்த விவாதத்தைக் கிளப்பினார்களோ தெரியவில்லை.

சர். பன்னீர் செல்வத்தின் மூளை விசித்திரமானது! சிறிது காலமாக அவர் மூளை இன்னமும் விசித்திரமான வழியில் போய்க் கொண்டிருக்கிறது. காரணம் என்னவோ தெரியவில்லை.

காரணமா? மமதைதான்! சென்னை சட்டசபையில் அவர் ஒருவரே கத்தோலிக்கர் இருப்பதாக அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார். அவரைப் போலவே இன்னும் 5, 6 பேர் இருப்பது அவருக்கு ஞாபகமே இல்லை. ஆமாம், மதம் பொய்; கடவுள் இல்லையென்று கும்மாளம் போடும் சுயமரியாதை இயக்க ஜோதியில் கலந்த பன்னீர் செல்வத்துக்கு அந்த மூளை மறதி ஏற்படுவது இயற்கைதான்! சு. ம. ஜோதியில் கலந்த அவர் தானும் ஒரு கத்தோலிக்கரென்று சொல்லிக் கொள்ள என்ன யோக்யதை இருக்கிறதோ தெரியவில்லை இவரை பிஷப்புகளும், குருக்களும் இன்னமும் கண்டிக்காமல் விட்டுக்கொண்டிருப்பதின் மர்மமும் தெரியவில்லை கத்தோலிக்கர் உரிமைகளை பன்னீர் செல்வமே கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும், மற்றவர்கள் ஒன்றுக்கும் உதவாத கட்டைகளாகவும் பன்னீர் செல்வம் நினைத்துக் கொண்டிருக்கிறார். சு. ம. பன்னீர் செல்வத்தைவிட கத்தோலிக்க மத உரிமைகளைப் பாதுகாக்க, கத்தோலிக்க கிறிஸ்துவ வீரர் பத்தாயிரக்கணக்கிலிருக்கிறார்களென்பது அவருக்கு ஞாபகமிருக்கட்டும்.

அது போகட்டும்; வேறு விசேஷங்களுண்டா?

ஆம், ஆச்சாரியார் கொண்டு வந்திருக்கும் மலையான ஆலயப் பிரவேச மசோதா சம்பந்தமாகவும் தீவிர விவாதம் நடந்தது. ஹரிஜனங்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் ஜஸ்டிஸ் புலிகள் அந்த மசோதாவை எதிர்க்கின்றார்கள். ஹரிஜனங்களுக்காக வானத்தை வளைத்துவிடப் போவதாகக் கூறிய, மாஜி "பினமி" மந்திரி ஆர். எம் பாலட் தீவிரமாக எதிர்த்தார். ஹரிஜனங்களுக்கு ஆலய பிரவேசமே கூடாதென்றார். இதில் ஒரு விசேஷம். ஹரிஜன "வீராதி வீரர்" எம். சி. ராஜாவும், பாலட்டும் நண்பர்கள். பாலட் ஹரிஜன மசோதாவை எதிர்த்த வேகத்தைக் கண்டு எம். சி ராஜா பே பே யென விழித்துக்கொண்டிருந்தது எனக்கு வேடிக்கையாகயிருந்தது! சென்னை அசெம்பிளியில் மற்றொரு சம்பவம் நடந்தது இன்னமும் பெரிய வேடிக்கையாக இருந்தது. அசெம்பிளித் தலைவர் புலூசு சாம்பமூர்த்தி பிறர் கைக்கவும், பிறர் ஏளனஞ்செய்யவும் இடங்கொடுத்துவிட்டார். தலைவர் பதவி உயர்ந்தது; தலைவர் அசெம்பிளிக்கு முடிசூடா மன்னரென்று சொல்லலாம். என்றாலும், ஒரு சிறு விஷயத்தில் புத்தியைத் தவறவிட்டார். ஆந்திர பக்தியே அவருடைய தவறுதலுக்கு முக்கிய காரணமென்று சொல்லலாம். ஆங்கில நடவடிக்கை ஒரு ஆந்திரருக்குப் புரியவில்லை. அவர் அதைத் தெலுங்கில் கூறும்படி கேட்டார். அவ்வளவுதான், உடனே ஆங்கில நடவடிக்கையைத் தெலுங்கில் மொழிபெயர்த்துக் கூறும்படி தலைவர் வற்புறுத்தினர். முதன் மந்திரி ஆச்சாரியார் எவ்வளவோ நயந்து கேட்டும், தலைவர் சாம்பமூர்த்தி பிடிவாதஞ் செய்தார். கடைசியில் ஆச்சாரியார், காரியதரிசி காளேஸ்வரராவ் தெலுங்கில் மொழி பெயர்த்துக் கூற நேரிட்டது. அவ்வளவுதான்; சனியன் பிடித்துவிட்டது. தமிழிலும், தெலுங்கு, மலையாளத்திலும் மொழிபெயர்த்துக் கூறும்படி பலர் கிளம்பிவிட்டார்கள். தலைவருக்குப் புத்தி வந்தது. நிலைமையை ஒருவாறு சமாளித்துவிட்டார். தலைவர் இவ்வித சங்கடம் ஏற்படுமென்பதை ஏற்கனவே அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு பாஷையிலும் மொழி பெயர்த்துக்கொண்டே போனல், அசெம்பிளி நடவடிக்கைகளை வருஷம் 365 தினங்களும் நடத்திக்கொண்டிருக்க வேண்டியதுதான் ஆங்கிலம் தெரியாதவர்கள் ஆங்கிலம் படிக்கவேண்டும். இன்றேல், வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கவேண்டும். மறுநாள் பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும். அசெம்பிளியிலேயே மொழிபெயர்த்துக் கூறும்படி கேட்பதில் அர்த்தமே இல்லை. அதைத் தலைவர் ஆதரித்ததும் பெரிய அசட்டுத்தனம்.

தலைவர் அவ்வளவு மோசமாக நடந்துகொண்டது வருந்தத் தக்கதே; வேறு சம்பவங்களுண்டா?

உதவி இந்திய மந்திரி கர்னல் மூர்ஹெட் சென்னைக்கு வந்திருக்கிறார் சென்னை அசெம்பிளி நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறார். அவருக்கு சட்டசபைத் தலைவர், ஒரு டீ பார்ட்டி கொடுத்தார். எல்லா மந்திரிகளும் போயிருந்தார்கள். மூர்ஹெட் அகம்பாவம் பிடித்தவர். அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பிறர்பதில் சொல்ல வேண்டுமாம்! அவரிடம் பெடரேஷனைப்பற்றிக் கேள்விகேட்கக் கூடாதாம்! கேட்டால் பதில் கிடையாதாம். சென்னை மந்திரிகள், உதவி இந்திய மந்திரிக்குப் பதில் கூறி பதில் வாங்கினார்களா, அல்லது, பதில் கூறியதோடு அவரை விட்டுவிட்டார்களா தெரியவில்லை.

தமிழ் நாடு சம்பந்தப் பட்ட வரையில் விசேஷம் ஒன்றுமில்லையா?

ஆம், ஒரு முக்கியமான விஷயத்தை இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. இம்மாத முடிவில் தமிழ் மாகாண மகா நாடு நடக்கப் போகிறது. அந்த மகா நாட்டுக்குத் தலைவர் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தலைவராக வரக்கூடியவர், எந்த அசெம்பிளியிலோ, அல்லது, நகர சபையிலோ, அங்கத்தினராக இருக்கக்கூடாது. காங்கிரசை உயிராக மதித்துக், காங்கிரஸ் பணியையே அவருடைய ஒரே பணியாகக் கொண்டிருக்க வேண்டும். முதுகெலும்பில்லாத ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கவே கூடாது. உறுதியும், ஆண்மையும், உண்மையுமுள்ள ஒரு தலைவரையே தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலகிலேயே மகா பக்காத் திருடன் ஜெக்கோஸ்லோவாகியா என்னுமிடத்திலிருக்கிறான். இவன் ஒரு மணி நேரத்தில் 5 இடங்களில் திருடி அகப்பட்டுக்கொண்டான்.

சீனுவில் தீவிரமான போர்

ஹாங்கோவில் ஜப்பானியரை எதிர்த்துச் சண்டை செய்துவரும் சீன ஜெனரல் சென்-செஸ்.

ஜப்பானியர் ஏற்பாடு - - - சீனர் வெற்றி

ஜப்பானியர், சீனவில் கைப்பற்றிய பிரதேசங்களில் பல பொம்மை சர்க்கார்களை ஏற்படுத்தி வருகின்றனர். பீகிங்கைத் தலைநகராகக் கொண்ட ஒரு புதிய மத்திய பொம்மை சர்க்காரை ஏற்படுத்த ஜப்பானியர் முயற்சி செய்து வந்தார்கள்; அவர்கள் முயற்சி கைகொடுக்கவில்லை ஜப்பானியரே அதற்கு முட்டுக்கட்டை போட்டார்கள். புதிய பொம்மை சர்க்காரின் அமைப்பு, எங்கெந்த பிரதேசங்களில் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைப் பற்றி ஜப்பான் ராணுவத்திலுள்ள பல பகுதியினரிடையே அபிப்ராய பேதம் எழுந்தது ஆகவே, மத்திய பொம்மை சர்க்கார் ஏற்படுத்தும் விஷயம் தற்போது தடைப்பட்டுப் போய்விட்டது.

சீனர் தீவிரம்

வடக்கு ஹோனுன், தெற்கு ஷான்ஸி மாகாணங்களில் சீனக் குரங்குச் சண்டை வீரர்கள் வெகு தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களில் பலர் மஞ்சள் நதியைக் கடந்து, பீகிங்-ஹாங்கோ-ஷான்ஸி ரயில் பாதைகளை சேதப்படுத்தி வருகிறார்கள். ஆங்காங்கு தனித்தனியாகவுள்ள ஜப்பானியப் படைகளையும் அடியோடு நாசஞ் செய்து வருகின்றனர். காண்டனைச் சுற்றிலுமுள்ள பலவிடங்களைச் சீனத் துருப்புகள் பிடித்துக் கொண்டுவிட்டன புதிதாக வரும் துருப்புகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள காண்டனுக்குள்ளிருக்கும் ஜப்பான் துருப்புகள் முயற்சித்து வருகின்றன பீங்போ என்ற துறைமுகத்துக்கு 11 ஜப்பானிய யுத்தக் கப்பல்களும், 6 விமானங்களும் வந்தன. ஆனல், யுத்தக் கப்பல்களில் வந்த ஜப்பான் துருப்புகளை இறக்குமதி செய்யவில்லை சீனர் அதற்கு இடங்கொடுக்காததே காரணம்.

வெடி குண்டு

முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கும் வியான் என்ற பிரதேசத்தின்மீது ஜப்பானிய விமானங்கள் பல வெடிகுண்டுகளை எறிந்தார்கள். இதனல் பல கடைகளும், கட்டிடங்களும் நாசமாயின. 4 மசூதிகள் வெடிகுண்டால் அழிக்கப்பட்டன 100 பேர் மாண்டனர் ஒரு கத்தோலிக்க மடத்தின்மீதும் வெடிகுண்டுகள் விழுந்து அந்த மடம் தரைமட்டமாகிவிட்டது அங்கிருந்தவர்களில் 20 பேர் மாண்டனர்.

சீனர் போராட்டம்

காண்டனைச் சீனர் மும்முரமாக முற்றுகை போட்டு வருகின்றனர் யுத்த தளவாடங்கள் மிகக் குறைவாக இருந்தும், பிரிட்டிஷ் எல்லை அருகில் சுமார் 17000 சீனர்கள் மிகுந்த தீரத்துடன் ஜப்பானியர் குண்டுகளை லட்சியஞ் செய்யாமல் கடும்போர் புரிகின்றனர். எல்லைப் புறங்களிலுள்ள பிரிட்டிஷார் பாடு பெரும் திண்டாட்டத்திலிருக்கிறது. ஜப்பானியக் குண்டுகள் பிரிட்டிஷார் பிரதேசத்துக்குள்ளும் விழுகின்றன. காயமடைந்த சீனர்கள் கூடப் பிரிட்டிஷார் எல்லைக்கு ஓடி சிகிச்சை பெற்று வருகின்றனர். எல்லைப்புறத்திலுள்ள பாலங்களில் இந்திய சோல்ஜர்கள்தான் பாரா கொடுத்து வருகின்றனர். காண்டன் முற்றுகைக்காக இன்னம் ஏராளமான சீனத் துருப்புகள் காண்டனை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. காண்டனை நோக்கி ஜப்பான் துருப்புகளும் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன காண்டனுக்குச் சற்று தூரத்தில் சீனருக்கும், ஜப்பானியருக்கும் நடந்த போராட்டத்தில் ஜப்பானியர் 1000 சீனர்களைக் கொன்று விட்டனர். யாங்ட்ஸீ நதியின் வடகரையில், ஹாங்கோ வீழ்ச்சிக்குப் பின் ஜப்பானியர் ஆரம்பித்த போராட்டம்

(12-ம் பக்கம் பார்க்க)

யுத்தகளங்களுக்கு சீனர் மட்டுமல்ல, சீனப் பெண்களும் துப்பாக்கி தாங்கிப் போயிருக்கிறார்கள். ஆடவருடன், பெண்களும் ஆக்ரோஷத்துடன் சண்டை செய்து வருகிறார்கள்.

யுத்தகளத்தில் காயமடைந்த சீன சோல்ஜர்களை சீனர் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குக் கொண்டு போகிறார்கள்.

டிராலியின்

கமகமவென பரிமளிக்கும்

கஸ்தூரி சோப்

அது ஒன்றையே வாங்குங்கள்.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,

52, பந்தர் தெரு, மதராஸ்.

பிராஞ்சு:-மதுரை.

தமிழ் மணி

சென்னை—வெகுதானிய ஹு கார்த்திகை 19௨ (4-12-1938)

பகற் கொள்ளை!

கொள்ளைக் கூட்டத்தினரும், திருடர்களும் பொதுவாக இராக் காலங்களில் தான் கொள்ளையடிப்பதுண்டு. சட்ட பூர்வமாகத் தனவந்தரும், அதிகாரிகளும், ஏழை மக்களைக் கொள்ளையடிப்பதையே பகற் கொள்ளையென்று சொல்லுவது. ஜமீன்தார்கள், குடியானவர்களைக் கொள்ளையடிப்பது இந்தப் பகற் கொள்ளை ரகத்தைச் சேர்ந்தது. அந்தக் கொள்ளையும் கொஞ்சமல்ல. கோடிக் கணக்கில். இந்தக் கொள்ளைக்குச் சட்டமும் இதுவரையில் இடம் கொடுத்தே வந்திருக்கிறது. இக் கொள்ளையைத் தடுக்க ஜமீன் குடிகள் பலமுறை கதறினார்கள். இது வரையில் அதிகாரத்திலிருந்த சர்க்கார் தாசருக்கு அவர்கள் கூக்குரல் எட்டவில்லை. கடைசியாகக் காங்கிரஸ் சர்க்கார் ஏழைக் குடியானவர்களின் கூக்குரலைக் கவனித்தார்கள். குடியானவர்களுக்கு இருந்து வரும் குறைகளை நிவாரணிக்க ஒரு வழி தேடினர். ரெவினியூ மந்திரி பிரகாசம் தலைமையில், சென்ற வருடம் செப்டம்பர் மாதம் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியின் அறிக்கை வெளிவந்து விட்டது. ஜமீன்தார், குடியானவர்களுக்கிருக்கும் குறைகளைத் தீர விசாரித்தே அந்த அறிக்கை தயாரித்திருக்கின்றனர்.

ஜமீன்தார்கள் ஓலம்

பிரகாசம் கமிட்டி அறிக்கையைக் கண்டு ஜமீன்தார்களுக்கு நடுக்க மேற்பட்டு விட்டது. அவர்கள் இதுவரையில், அதாவது, 1802ம் வருடத்திலிருந்து, இது வரையில் சுமார் 135 வருடங்களாக கொள்ளை கொண்டு வந்த பகற் கொள்ளைக்கு ஆபத்து வந்துவிட்டதே யென்று ஓலமிடுகிறார்கள். குடியானவர்கள் கதறியது ஒரு காலம் இப்பொழுது ஜமீன்தார்கள் கதறியழ வேண்டிய நிலைமை வந்து விட்டது. யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வருமென்ற பழமொழி வீண் போகுமா? ஜமீன்தார்கள் இதுவரையில் அடித்து வந்த கொள்ளைக்குப் பிரகாசம் கமிட்டியார் முற்றுப்புள்ளி போட்டு விட்டார்கள். கொள்ளைக்கு மட்டுமல்ல; ஜமீன்களே ஜமீன்தார்களுக்குச் சொந்தமல்ல; அது குடியானவர்களுக்கே சொந்தமென்று கூறுகிறார்கள். அவர்கள் வெறும் ஆதாரங்களைக் கொண்டு அப்படிக் கூறவில்லை. சரித்திர பூர்வமான ஆதாரங்களைத் தேடிப் பிடித்தே அவ்வாறு கூறுகிறார்கள். சர்வ போகம் அனுபவித்து வந்த ஜமீன்தார்களுக்கு இது எப்படியிருக்கும்? அடி வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போலிருக்குமென்பதில் சந்தேகமென்ன?

கமிட்டிக்கு சிபார்சு

பிரகாசம் கமிட்டியார் ஜமீன்தார்-குடியானவர்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்னைகளையெல்லாம் தெளிவாகச் சிபார்சு செய்திருக்கிறார்கள். 1802ம் வருடத்துச் சாஸ்வத செட்டில் மெண்ட் விஷயத்திலேயே பிரகாசம் கமிட்டியார் விசேஷ அக்கரை செலுத்தியிருக்கிறார்கள். அந்த வருடத்தில் ஜமீன்தார்கள் சர்க்காருக்கு எவ்வளவு கப்பம் கட்ட வேண்டுமென்பதை நிர்ணயித்தனர். ஜமீன்தார்களுக்கு ஏற்பட்ட கப்ப நிர்ணயம் குடியானவர்களுக்கு ஏற்பட்ட வரி நிர்ணயமென்பதில் சந்தேகமில்லை. ஆனால், குடியானவர்கள் வரி நிர்ணயத்தை ஜமீன்தார்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களில்லை. ஜமீன்தார் கப்ப நிர்ணயத்தை மட்டும் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்! இது என்ன நீதியோ தெரியவில்லை.

கொள்ளை, கொள்ளை!

சாஸ்வத செட்டில் மெண்ட் மூலம் ஜமீன்தார்கள், குடியானவர்களை எவ்வாறு கொள்ளை யடித்து வந்தார்களென்பதை ஆராய்வோம். சென்னை மாகாணத்திலுள்ள ஜமீன்தார்கள் எல்லோரும் சர்க்காருக்கு சுமார் 41. 2 லக்ஷம் ரூபாய் வருடத்துக்குக் கப்பம் (பேஷ்கஷ்) கட்ட வேண்டும். அதாவது, ஜமீன்தார்கள் குடியானவர்களிடமிருந்து எவ்வளவு வரி வசூலிக்கிறார்களோ, அதில் மூன்றில் இரு பங்கை, சர்க்காருக்குக் கப்பமாகக் கட்ட வேண்டும். ஜமீன்தார்களுக்கு ஒரு பங்குதான். அப்படியானால் ஜமீன்தார்கள் குடியானவர்களிடமிருந்து வசூலிக்கும் மொத்த வரி 61. 8 லக்ஷம் ரூபாய். இதில் 41 2 லக்ஷம் ரூபாயைச் சர்க்காருக்குக் கப்பம் கட்டிவிட்டு, மீதி 20. 6 லக்ஷம் ரூபாயை ஜமீன்தார்கள் எடுத்து வந்தார்கள். ஆனால் இப்பொழுதோ, ஜமீன்தார்கள் குடியானவர்களிடமிருந்து வசூலிக்கும் தொகை, சுமார் 2 கோடியே 32¾ லக்ஷம் ரூபாய். என்றாலும், ஜமீன்தார்கள் பழைய சாஸ்வத செட்டில் மெண்டின் படி 41. 2 லக்ஷம் ரூபாய் தான் சர்க்காருக்குக் கப்பம் கட்டுகிறார்கள். மீதி ஒரு கோடியே 91½ லக்ஷம் ரூபாயை ஜமீன்தார்கள் வாயில் போட்டுக்கொள்ளுகிறார்கள் ஜமீன்தார்களின் வருஷ வருமானம் 20. 6 லக்ஷத்திலிருந்து 191. 5 லக்ஷத்துக்கு அதிகரித்து விட்டது. அதாவது, ஜமீன்தார்கள் வருமானம் சுமார் 9½ மடங்கு அதிகரித்துவிட்டது. இந்த வருமானத்திலிருந்து ஜமீன்தார்கள் குடியானவர்கள் அபிவிருத்திக்கு ஏதாவது செலவிடுகிறார்களா? பூஜ்யம். வருடமொன்றுக்கு சுமார் 50,000 ரூபாய் செலவு செய்வதும் கஷ்டம். ஆனால் குடியானவர்கள் இரத்தத்தைப் பிழிந்து வரி வசூலிப்பதில் மட்டும் ஜமீன்தார்கள் சலிப்பதே இல்லை.

நியாயம் என்ன?

ஜமீன் தார்கள் கொள்ளை கொள்ளும் லாபத்தில் குடியானவர்களுக்கும் பங்குண்டு இவ்வளவு லாபம் வந்தும், குடியானவர்கள் வரியைக் குறைக்கிறார்களா? இல்லை. குடியானவர்களின் வரி அதிகரித்துக் கொண்டே போகிறது. அவர்கள் ஜமீன்தார்களுடன் நின்று போராட மார்க்கமில்லை. ரயத்வாரிகள் சர்க்காருக்கு வரி கொடுக்கிறார்கள். சர்க்காரிடம் வரி குறைப்பதற்காகப் போராடுகிறார்கள். ஜமீன் குடிகள் யாரிடம் முறையிடுவது? சர்க்காரிடம் முறையிட முடியாது. அவர்கள் வரி கொடுக்கும் ஜமீன்தார்களிடந்தான் முறையிட வேண்டும். ஜமீன்தார்கள் போக்குத் தெரிந்த விஷயம். இந்த நிலைமையில் சர்க்கார் குறுக்கிடாமலிருக்க முடியுமா? முடியாது. காங்கிரஸ் சர்க்கார் குறுக்கிட்டு, ஜமீன்தார் முறையைத் திருத்தியமைக்கத் தீர்மானித்துவிட்டனர். குடிகளின் வரியைக் குறைக்க 1898ம் வருடம் கொண்டுவந்த செட்டில் மெண்ட் முறையையே கைக்கொள்ளப் போகிறார்கள். இதனால் ஜமீன் குடிகளின் வரி குறையும். ஜமீன்தார்கள் கொள்ளையில் பெரும் பாகம் சர்க்காருக்குப் போகும். அப்படியானால், ரயத்வாரி நிலவரித் தீர்வையைக் குறைக்கச் சர்க்காருக்கு ஏதுவிருக்கும், பிரகாசம் கமிட்டியின் அறிக்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதைச் சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டு வருவார்களாக. வரிச் சுமையால் தவிக்கும் ஏழை குடியானவர்களுக்கு அது பெரும் புண்ணியமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

மிருகத்தனம்

சமஸ்தானங்களிலுள்ள சர்க்கார் அடக்குமுறையைத்தான் கைக்கொண்டிருக்கிறார்களென நினைத்திருந்தோம். ஆனால், ஹைதராபாத் போலீசார் மிருகத்தனத்திலிறங்கியிருப்பது எவரையும் திடுக்கிடச் செய்யுமென்பதில் சந்தேகமில்லை. மிருகத் தனத்திலும் மகா கொடுமையான சித்திரவதைக்குப் போலீசார் காங்கிரஸ் சத்தியாக்கிரகிகளை உட்படுத்துகின்றனர். சட்டத்தை மீறி, சிறை புகும் சாத்விகத் தொண்டர்களை இம்சித்து, தடிகளால் அடித்துக் காயப்படுத்தி, மர்ம ஸ்தானங்களில் சூடு போட்டு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கிறார்களாம். நாகரீகமான ஒரு சமஸ்தானத்தில் இவ்வித கொடுமை நடக்குமா? இவ்வித கொடுமை நடப்பதை சமஸ்தான அதிகாரிகள் கண்டிக்காமலிருப்பார்களா? அப்படிக் கண்டிக்காமலிருக்கும் சமஸ்தான அதிகாரிகளை என்னென்று சொல்லுவது?

வெறும் வதந்தியல்ல

நிஜாம் சமஸ்தானத்தில் தொண்டர்களை இவ்வாறு மிருகத்தனமாக நிர்ப்பந்திப்பது வெறும் வதந்தியல்ல; உண்மை. இந்தக் கொடுமையை ஒரு எம். எல். ஸியே நேரில் கண்டிருக்கிறார். "பம்பாய் கிரானிகல்" பத்திரிகையைச் சேர்ந்த முகமது ஸித்திக் என்பவரும் இந்தக் கொடுமையைக் கண்ணாரக் கண்டு, போலீஸ் கமிஷனருக்கு அறிவித்திருக்கிறார். போலீஸ் கமிஷனர் இவ்விதக் கொடுமை செய்யும் போலீஸ் அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவாரென்று நம்புகிறோம். கமிஷனர் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால், ஹைதராபாத் உயர்தர அதிகாரிகள், விசேஷமாக சர். அக்பர் ஹைதாரி உடனே வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றேல், நிஜாம் சமஸ்தானத்தை உலகமெங்கும் சிரித்துப் பேச நேரிடும். அதற்கு அதிகாரிகள் இடங் கொடுக்காமல் சமஸ்தான கௌரவத்தைப் பாதுகாக்க முன் வருவார்களாக.

தலைவரி இல்லை

புதுச்சேரி, காரைக்கால் முதலிய பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் குடியேறியிருக்கும் பிரிட்டிஷ் இந்தியருக்கும், வர்த்தகர்களுக்கும் பிரஞ்சு இந்திய சர்க்கார் தலைவரி விதிக்கத் தீர்மானித்திருந்ததைக் கண்டித்து சென்ற வாரம் எழுதியிருந்தோம். இந்தத் தலைவரியை எதிர்த்துப் பிரஞ்சுப் பிரதேசங்களில் குடியேறியிருந்த பிரிட்டிஷ் இந்தியர் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தனர். இவர்கள் கிளர்ச்சியைக் கண்டு பிரஞ்சு இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் இந்தியருக்கு விதிக்க எண்ணிய தலைவரியை ரத்து செய்துவிட்டதாகத் தெரியவருகிறது. பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் குடியேறியிருக்கும் பிரிட்டிஷ் இந்தியருக்கு அந்தத் தலைவரி விதிக்கப் போவதில்லையென்றும், அன்னிய தேசத்தினருக்கே அந்த வரி விதிக்க பிரஞ்சு இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகவும் கேள்வி. அப்படியானால் பிரஞ்சு இந்திய சர்க்காரின் நிதானப் புத்தியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வீண் பிடிவாதஞ் செய்யாமல், நிதான புத்தியுடன் பிரஞ்சு இந்திய சர்க்கார் நடந்துகொண்டது போற்றுதற்குரியதாகும். பிரிட்டிஷ் இந்திய மக்கள் பிரஞ்சு இந்திய சர்க்காரின், மன மாற்றத்துக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மணி யோசை



ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை.

முதன் மந்திரியே,

இரண்டொரு விஷயங்களைத் தவிர உங்கள் திறமையை நான் அடிக்கடி வியந்திருக்கிறேன். பரந்த அறிவும், சாமர்த்தியமான மூளையும் உங்களுக்கு உண்டு. பெரிய ராஜதந்திரி. பேச்சில் நிபுணர். சென்னை வெள்ளையர் கொடுத்த செயிண்ட் ஆண்ட்ரூஸ் விருந்தில் நீங்கள் வெள்ளையருக்குக் கொடுத்த கிண்டலான தட்டு, உங்கள் பேச்சின் சாமர்த்தியத்துக்கு ஒரு உதாரணம். அதே விருந்தில், இந்தியாவை ஆளும் உரிமை இந்தியருக்கே உண்டென்பதையும் ஆணித்தரமாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். இதுமட்டுமல்ல; சென்னை அசெம்பிளியிலும், கவுன்சிலிலும், உங்களோடு தலையிலடித்துக்கொள்ள யாராலும் முடியாது; தந்திரமாக எவரையும் மடக்கிவிடுவீர்கள். அவ்வளவு திறமைவாய்ந்த நீங்கள், ஒரு விஷயத்தில் வீண் பிடிவாதம் காட்டியது வருந்தத் தக்கது. அசெம்பிளியில் சுராவல்பாஷாவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றினீர்கள். அந்தத் தீர்மானத்தையும் நீங்களே கொண்டுவந்தீர்கள். ஆனால், இந்திய வீரப்புதல்வர்களில் ஒருவரும் காங்கிரசில் சேர்ந்து, காங்கிரசுக்காகவும், தேசத்துக்காகவும் பெருந் தியாகஞ்செய்து, உயிர் நீத்த ஷவுக்கத் அலி மரணத்துக்கு வருந்தி, ஒரு அனுதாபத் தீர்மானம் கொண்டுவர மறுத்துவிட்டீர்கள். ஷவுக்கத் அலிக்கு நீங்கள் நண்பரென்றும், அவர் பெரிய தியாகி என்பதையும் ஒப்புக் கொண்டீர்கள். அப்படியிருந்தும் தீர்மானத்துக்கு இடங் கொடுக்கவில்லை. அது ஏன்? அவர் காங்கிரசில் இல்லாத காரணமா? மௌலானாவின் கொள்கை இடையில் மாறுபட்டிருக்கலாம்; அவர் காங்கிரசில் இல்லாமலிருக்கலாம் அதற்காக அவர்மீது அனுதாபத் தீர்மானம் கொண்டுவரக்கூடாதென்பது உங்கள் நினைப்பா? அவர் சென்னை மாகாண அசெம்பிளி மெம்பரல்ல; இந்திய சட்டசபை மெம்பர். அதற்காக அனுதாபத் தீர்மானம் கொண்டுவரவில்லையென்று நீங்கள் கூறினீர்கள். இதர மாகாணங்களில் அவர் மரணத்துக்கு வருந்தி தீர்மானம் செய்திருக்கிறார்களே அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? இவ்விஷயத்தில் நீங்கள் செய்த தவறு தவறுதான். அதை மறைப்பதில் பயனில்லை. மாஜி காங்கிரஸ் பக்தர்கள் பிற்காலத்தில் எவ்வளவுதான் கொள்கையில் மாறுபட்டிருந்த போதிலும், அவர்களுடைய பழைய சேவையை மறக்கக் கூடாது. அதிலும் அவர்கள் இறந்தபின் கண்டிப்பாக அவர்கள் சேவையைப் பாராட்டியே தீரவேண்டும். இந்த நியாயத்தை நீங்கள் இப்பொழுதாவது ஒப்புக் கொள்ளுவீர்களென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

டாக்டர். வரதராஜுலு நாயுடுகாரு,
சென்னை.

பழந் தலைவரே,

உங்கள் கர்ஜனையும், கம்பீரத் தொனியும், மறைந்துவிட்டது; பழமையாகி விட்டது. உங்களுக்கிருந்த செல்வாக்கும் அடியோடு மாண்டு விட்டது. என்றாலும், உங்கள் பழைய வாசனை உங்களை விடவில்லை. இடையிடையே அறிக்கைவிட்டுத் தமிழர் ரோஷத்தைக் கிளப்பி விடுவதில் நீங்கள் பின்வாங்குவதில்லை. சமீபத்தில் ஹிந்தி எதிர்ப்புக்காரர் என்று கூறிக் கொள்ளும் வதைப்புத் துவேஷிகளுக்கு நீங்கள் கொடுத்திருக்கும் சவுக்கடியைப் பாராட்டுகிறேன். ஆனால், உங்கள் அறிக்கையில் சில விஷயங்கள் தெளிவாக இல்லை "தற்போதைய சர்க்கார் கொள்கையை மாற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று உங்கள் அறிக்கையை முடித்திருக்கிறீர்கள். தற்போதைய சர்க்கார் கொள்கையில் எதை மாற்றும்படி நீங்கள் விரும்புகிறீர்கள். ஹிந்தி எதிர்ப்புக்காரர் காலித்தனத்தை அடக்கும் விஷயத்தில் சர்க்கார் கொள்கையை மாற்றும்படி கூறுகிறீர்களா, அல்லது, ஹிந்தி விஷயத்தில் சர்க்கார் கொள்கையை மாற்றும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறீர்களா? எது வென்பது திட்டமாகத் தெரியவில்லை. பட்டும் படாமலும், அர்த்தம் புரியாமலும் அறிக்கை விடுவதில் பயனில்லை. அது நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும். ஆகவே, உங்கள் கருத்து இன்னதென்பதைத் தெளிவாகக் கூறும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

டிங்—டாங்

முத்துரங்க முதலியார்,
புது-டில்லி.

தமிழ்நாட்டுத் தலைவரே,

உங்கள் தலைவர் பதவி முடியும் காலம் நெருங்கிவிட்டது. உங்கள் காலத்தில் காங்கிரசில் ஏற்பட்ட ஊழல்கள் கொஞ்சமல்ல. முதுகெலும்பில்லாத நீங்களே அந்த ஊழல்களுக்குக் காரணமென்று பல தடவை கூறிவந்திருக்கிறேன். இப்பொழுதும் கடைசி முறையாக அதையே உங்களிடம் கூறுகிறேன் நீங்கள் தலைவராக இருந்த காலத்தில் காங்கிரஸ் நிர்வாகத்தை எவ்வளவு திறம்பட நடத்தி வந்திருக்கிறீர்களென்றால், உங்கள் ஜில்லாவில் இதற்குமுன்னிருந்த காங்கிரஸ் அங்கத்தினர் தொகையைவிட இந்தவருடம் குறைந்திருக்கிறது. குறைவும் கொஞ்சமல்ல ஆயிரக்கணக்கில்! உங்கள் நிர்வாகத் திறமைக்கு இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்? போனது போகட்டும். மீண்டும் தமிழ்நாட்டுக்குத் தலைவராக வரக் கனவிலும் நினைக்கவேண்டாம். அது ஒன்றே எனது கடைசி வேண்டுகோள்.

டிங்—டாங்

அப்துல் ஹமீத்கான்,
சென்னை.

லீக் வீரரே,

அசெம்பிளியில் உங்கள் கூத்துத்தான் பெரிய கூத்தாக இருக்கிறது! தொட்டதெல்லாம் முந்திரிக் கொட்டை மாதிரி முன்வந்து விடுகிறீர்களே, அதையாவது புத்திசாலித்தனமாகப் பேசுகிறீர்களா? நீங்கள் பேச எழுந்தால் அசெம்பிளியிலுள்ள பலருக்குத் தலைவலி வந்துவிடுகிறது. ஒரு புட்டி அமிர்தாஞ்சனம் கொண்டுவந்திருந்தால் நலமாயிருக்குமென்று தோன்றுகிறது அசெம்பிளியில் பலர் சிரிக்கப் பலர் வெறுக்கப் பேசுவதிலும் பேசாமலிருந்து விடுவது புத்தி சாலித்தனமல்லவா? இனிமேலாவது உணர்ந்து நடந்து கொள்ளுவீர்களென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

கே. ஆர். கரந்த் கோஷ்டியார்,
சென்னை.

அடங்காப் பிடாரிகளே,

சென்னை அசெம்பிளி காங்கிரஸ் கட்சியில் நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டியார், உங்கள்மீதும், செல்வபதி செட்டியார்மீதும், வேணுநாயக்கர்மீதும் ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி கேட்டிருக்கிறார்கள். நீங்கள் மூவரும் நல்ல தேச பக்தர்கள்தான். இல்லையென்று மறுக்கவில்லை. காங்கிரஸ் கொள்கை உங்களுக்குப் பிடிக்காவிட்டால், மரியாதையாக அதிலிருந்து விலகிவிட வேண்டும். காங்கிரஸ் பேரால் அசெம்பிளிக்கு வந்த நீங்கள் சட்டப்படி முதன் முதலில் அந்தப் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட்டு அப்புறம் காங்கிரசைக் கண்டிக்க முற்படவேண்டும். காங்கிரஸ் கட்சியிலிருந்து கொண்டு காங்கிரஸையே கண்டிக்கப் புறப்படுவது அதிகப்பிரசங்கித்தனமேயல்லாது வேறல்ல. அது காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு நேர் விரோதமாகும். உங்களுக்கும் அவ்வளவு ரோஷமிருக்குமேயானால் உடனே அப்பதவிகளை ராஜிநாமா செய்து விடுங்கள். இன்றேல், உங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு, உங்கள் தவறை திருத்திக்கொள்ளுங்கள். இதைத் தவிர வேறு வழி இல்லை. காங்கிரசில் அடங்காப்பிடாரிகளின் தொகை அதிகரித்துக் கொண்டு வருகிறது. இது காங்கிரசுக்கே பெரிய மானக் கேடாக இருக்கிறது. காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி, காங்கிரசுக்குக் கெட்ட பெயரைக் கொண்டுவருவதிலும் நீங்கள் காங்கிரசிலிருந்தே தொலைந்து போவது நல்லது. சீக்கிரம் ஒரு முடிவுக்கு வருவீர்களென்று நினைக்கிறேன். நீங்கள் மட்டுமல்ல; உங்களைப் போன்ற அடங்காப் பிடாரிகளெல்லாம் காங்கிரசிலிருந்து தொலைந்து போகவேண்டுமென்பதே எனது ஆவல்.

டிங்—டாங்

ஆர் எம். பாலட்,
சென்னை.

பிரசங்பதியே!

உங்கள் முனை ஜோதியைக் கண்டு பிரமித்துப் போனேன். அசெம்பிளியில் ஆலயப்பிரவேச மசோதாவை நீங்கள் எதிர்ப்பதற்கு ஒரு அபூர்வமான காரணம் காட்டினீர்கள். எம். சி.

(அடுத்த பக்கம் பார்க்க)

மறைந்த மௌலானா

காலஞ் சென்ற மௌலானா ஷவுக்கத் அலி இந்தியப் போர் வீரர்களில் ஒருவர். அவரும், அவருடைய சகோதரரான காலஞ் சென்ற மௌலானா முகம்மது அலியும் காங்கிரசில் சேர்ந்திருந்த காலத்தில், இந்தியாவுக்கே, சேவை செய்திருக்கிறார்கள் உயரிய உத்தியோகங்களை உதறித்தள்ளி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டார்கள். காந்திஜியின் கட்டளைக்குப் பணிந்து சிறந்த தொண்டாற்றினர். காந்திஜிக்கு இரு மௌலானாக்களும் வலது கரம் இடது கரம் போன்று விளங்கினார்கள். அக்காலத்தில் அலி சகோதரரென்றாலே சர்க்காருக்குச் சிம்ம சொர்ப்பனந்தான். இந்திய மக்கள் அலி சகோதரர்களைச் சகோதரர்களாக பாவித்து, அவர்கள் மீது அளவு கடந்த அன்பு காட்டினர். ஆனால், பிற்காலத்தில் இரு சகோதரர்களும் கொள்கை காரணமாகக் காங்கிரசிலிருந்து விலகினர். மௌலானா முகமதலி லண்டன் மகாநாட்டுக்குச் சென்றார் அங்கு இந்தியர் சுதந்திரத்திற்காகத் தீவிரமாக வாதாடினர். லண்டன் மாநாட்டில் அவர் செய்த பிரசங்கங்கள் பொன்னே போல் போற்றத்தகும். லண்டனிலிருந்து இந்தியா திரும்பிவரும் காலத்தில் மௌலானா முகமதலி காலஞ் சென்றார். அவரை மெக்கா புண்ய ஸ்தலத்தில் அடக்கஞ் செய்தனர்.

அலி சகோதரர்களின் தேக சௌக்யம் கெட்டதற்கு அவர்கள் ஓயா உழைப்பே காரணம். சிறை சென்றதில் இருவரும் நோய் வாய்ப்பட நேர்ந்தது என்றாலும், அவர்கள் இருவரும் சாகும் வரையில் சலிக்காமல் போராடியே வந்தார்கள் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக இருவரும் பெரும் முயற்சி செய்து வந்தார்கள். அவர்கள் முயற்சி கைகூடுமுன் இருவரும் காலஞ் சென்றனர். மௌலானா ஷவுக்கத் அலி பிற்காலத்தில் ஒரு வகுப்புவாதியாக மாறியபோதிலும், அவர் தேசாபிமானத்தை இந்திய மக்கள் என்றும் மறக்க முடியாது. இந்திய சுதந்திரப்போராட்ட சரித்திரத்தில் அலி சகோதரர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுமென்பதில் சந்தேகமில்லை. மௌலானா ஷவுக்கத் அலி ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

(முன் பக்கத்தொடர்ச்சி)

ராஜா ஏற்கனவே கொண்டுவந்த ஆலயப்பிரவேச மசோதாவை, அசெம்பிளியிலுள்ள ஹரிஜன மெம்பர்கள் எதிர்த்ததால், ஆலயப்பிரவேசத்துக்கு ஹரிஜன் மெம்பர்கள் ஆதரவளிக்கவில்லையென்றும், ஆதலால், ஆச்சாரியார் கொண்டுவந்திருக்கும் மசோதாவை நீங்கள் எதிர்ப்பதாகவும் ஒரு காரணம் சொன்னீர்கள். என்ன அற்புதமான காரணம்! என்ன அபூர்வமான யோசனை!! உங்கள் மூளையின் விசித்திரமே விசித்திரம்! இப்பேர்ப்பட்ட அற்புதமான மூளையை சும்மா விடக்கூடாது. அதை கட்டாயம் இன்ஸூர் செய்துவைத்தால் நல்லது. உடனே ஏதாவது அமெரிக்க நிபுணருக்கு எழுதி அதற்கான ஏற்பாடுகளை செய்வீர்களாக. இல்லாவிட்டால், உங்கள் மூளைக்கு ஆபத்து வந்துவிடும், அதில் கோளாறு ஏற்பட்டுவிட்டால் ஒன்றுக்குமே உதவாதுபோகும். ஆகவே, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுங்கள், மறந்துவிட வேண்டாம்.

டிங்—டாங்

சோமசுந்தர பாரதியார்,
சென்னை.

புதுப் "பெரியாரே"!

ராமசாமி நாயக்கருக்கு சுயமரியாதைக்காரர் பெரியார் என்ற பட்டம் கொடுத்திருக்கிறார்கள். எதற்காகக் கொடுத்தார்களோ எனக்குத் தெரியாது. அவர் உருவத்தைக் கண்டு அந்தப் பட்டம் கொடுத்தார்களா, அல்லது, வளர்ந்து நரைத்த மீசை தாடிக்குக் கொடுத்தார்களா வென்பதை சு. ம. காரரிடம் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால், உங்களுக்கும் படிப் படியாகப் பெரியார் பட்டம் கொடுத்துவருவதைக் கண்டு சிரிப்பாகச் சிரித்தேன். நீங்களும் ஒரு பெரியார்தானோ? பெரியாரென்றால், எந்த வகையில் பெரியார்? அதை சற்று விளக்கிக் கூறினால், இன்று முதல் நானும் உங்களைப் பெரியாரென்று அழைக்கத் தயார். அதற்குச் சந்தேகமே வேண்டாம்.

டிங்—டாங்

திரு: வி. கலியாணசுந்தர
முதலியார்,
சென்னை.

தமிழ் பெரியாரே,

உங்கள் தமிழ் புலமைக்கும், ஆராய்ச்சிக்கும் எனது வணக்கம். ஆனால், செம்மறிக் கோம்புபோல் ஊசலாடும் உங்கள் நிலையற்ற கொள்கைக்கு எனது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எப்பொழுதுமே உங்களிடம் உறுதியான கொள்கையே கிடையாது. உங்கள் கொள்கை என்ன வென்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லுங்கள் அதுதான் சரி. விளக்கெண்ணெய் மாதிரி, வழ வழா கொழ கொழா வென்று, அங்குமில்லாமல் இங்குமில்லாமல் உங்கள் அபிப்ராயத்தைக் கூறவேண்டாம். ஹிந்தி அவசியமா, இல்லையா? ஹிந்தியால் தமிழுக்கு ஆபத்து ஏற்படுமா? ஹிந்தியை எதிர்ப்பதாகக் கூறுவோர் செய்யும் காலித்தனம் நியாயமானதா? வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று நேரடியான பதில் கூறுங்கள். உண்மையான அபிப்ராயத்தைக் கூறுவதால் தலை போய்விடாது. எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக இருக்கப் பார்ப்பது வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டுவது தான் ஆபத்து. இனிமேலாவது ஒரு உறுதியான கொள்கையுடன் உங்கள் அபிப்ராயத்தை வெளியிடுவீர்களென்று எதிர்பார்க்கிறேன். தமிழரும் அதையே எதிர்பார்க்கிறார்கள். மறந்துவிட வேண்டாம்.

டிங்—டாங்

சர். சாதுல்லா,
அஸாம்

மாஜி மந்திரியே,

அஸாமில் ஏற்பட்டிருக்கும் காங்கிரஸ் கூட்டு மந்திரி சபையைக் கவிழ்க்க, வெள்ளையருடன் சேர்ந்து எவ்வளவோ சூழ்ச்சி செய்து பார்த்தீர்கள். உங்கள் சூழ்ச்சி பலிக்கவில்லை. காங்கிரஸ்காரர் மந்திரி சபை அமைப்பதற்கு முன்னாடியே, மந்திரி சபைமீது ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தீர்கள். அத்தீர்மானத்தை அஸாம் அசெம்பிளி கூடியதும், விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளுவதாகத் தெரிவித்தீர்கள். அசெம்பிளி கூடியது உங்கள் தீர்மானம் வரவில்லை. அதை வேறொரு சமயத்துக்கு ஒத்தி வைத்து விட்டீர்கள். ஏன்? உங்களுக்கு மெஜாரிட்டி இல்லை, காங்கிரஸ் மந்திரிகளுக்கே மெஜாரிட்டி இருக்கிறதென்பது தெளிவாகி விட்டது. இனிமேல் அஸாம் மந்திரி சபையை உங்களால் அசைக்க முடியாதென்பது நிச்சயம். இதிலிருந்தாவது உங்கள் சூழ்ச்சிகளை மூட்டை கட்டிவிட்டுப் பேசாமல் ஒதுங்கியிருங்கள். அதுதான் உங்களுக்கு மரியாதை. இன்றேல், உங்கள் மானம் போய்விடுமே, மதிப்பும் சீரழிந்து போகும். இப்பொழுதே உங்களை எச்சரித்து விட்டேன். உஷார்!

டிங்—டாங்

புரட்சி முழக்கும் புத்தகங்கள்!!

மலபார் புரட்சி	வங்கப் புரட்சி	அந்தமான்
3 அணா	2 அணா	2 அணா

8 அணாவுக்கு 3 புத்தகங்களும் அனுப்பப்படும்
முன்பணம் கட்டும் ஏஜண்டுகளுக்கு நல்ல கமிஷன்
லோகசக்தி ஆபீஸ், 21-A, சௌத்கூவம் ரோட் சென்னை,

சீனாவின் தீவிரமான போர்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெறவில்லை. சீனர் ஹாங்கோவுக்கு 80 மைல் தூரத்திலுள்ள இடங்களைத் தாக்கி லோடின் என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள். கான்டனிலும், ஹாங்கோவிலும் தான் போராட்டம் பயங்கரமாக நடந்து வருகிறது. சீக்கிரம் ஜப்பானியர் திட்டம் போட்டிருக்கிறார்கள். பர்மாவுக்கு அடுத்தாற்போலிருக்கும் யுன்னான் மாகாணத்தை ஜெயிப்பதிலேயே ஜப்பானியர் விசேஷ ஊக்கமும், சிரத்தையும் காட்டி வருகிறார்கள். ஜப்பானியர் சீனாவை எதிர்ப்பதோடு நிற்க

போர் முனையில் காயப்பட்ட சீன சோல்ஜர்களை சிகிட்சை செய்யும் ஆஸ்பத்திரி இங்கு சோல்ஜர்களை சீனப் பெண்கள் சந்தித்துச் சந்தோஷமாகப் பேசி சோல்ஜர்களுக்கு உற்சாகமூட்டி வருகின்றனர்.

இவ் எல்லா முனைகளிலும் பெரிய போராட்டத்தை ஆரம்பிக்க ஜப்பானியர் வேலை செய்து வருகிறார்கள். ஒரே சமயத்தில் வட சீனா, தெற்கு சீனா முதலிய மூன்று இடங்களிலும் தீவிரமாகப் போராட்டத்தை ஆரம்பித்து, சீனா முழுவதையும் கைப்பற்றிக் கொள்ள மாட்டார்கள். ரஷியாவையும் எதிர்த்துப் போரிட எண்ணியிருக்கிறார்கள். அதற்காக ஏராளமான யுத்த தளவாடங்களைச் சேகரிக்க வேண்டுமென ஜப்பான் யுத்த மந்திரி ஜெனரல் இடகாகி, யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்வோர் மகா நாட்டில் பேசினர்.

இறுதியாக உங்கள்
வயிற்றுவலி நிவாரணத்துக்கு

டாக்டர். ஸ்மித்துடைய வயிற்று வலி நிவாரண பவுடரே ஏற்ற மருந்து. இதில் "மாக்னீஸியம் டிரிஸிலிகேட்" சேர்ந்திருப்பதால் வயிற்றுக்கு உடனே நீடித்த நிவாரணம் கிடைக்கிறது.

அஜீரணம், வயிற்றில் ஏற்படும் திராவக உபத்திரவம், இருதய எரிச்சல் முதலிய நோய்களுக்குப் பரம சஞ்சீவி. மேற்கூறிய நோய்களைக் குணப்படுத்தி உங்கள் வயிற்றுக்கு நீடித்த குணத்தைக் கொடுக்கிறது.

விலை ரூ. 1-6-0

சோல் ஏஜண்டுகள்:—

ஸ்பென்சர் அண்டு கம்பெனி, லிமிடெட்
மதராஸ்.

சங்கநாதம்

மயிலே இறகு போடு! -

- மொட்டைத் தலை முடுச்சு!

கல்லெறியக் "காப்பிரைட்"!

காலித்தனத்துக்கு "லைசென்ஸா?"

வளர்த்த கடா மார்பில் பாய்கிறது

- நீட்டிய மரத்தில் கூர்! -

(பூம்-பூம்)

மயிலே, மயிலே இறகு போடு என்றால் அது இறகு போடுமா? போடவே போடாது. பலாத்காரமாகத்தான் இறகை எடுக்கவேண்டும். சென்னையிலுள்ள சுயமரியாதைக்காரரும், அவர்களுடன் சேர்ந்து காங்கிரசை எதிர்க்கும், கூலிக் கூட்டத்தினரும் இந்த நிலைமையில்தானிருக்கிறார்கள். சென்ற மாதம் 21ந் தேதி நடந்த அட்டூழியத்துக்குப் பின் காலிகளுக்குப் புத்தி வந்திருக்கு மென்று நினைத்தேன். அந்த நல்ல புத்தி இன்னமும் ஏற்படவில்லை. ஆச்சாரியாரும் பழைய தர்ம உபதேசத்திலேயே மூழ்கிக் கிடக்கிறார். சென்னையில் நடந்த அட்டூழியங்களை அறிந்த பின்னும், அவர் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை போலீசார் தான் சற்று விழிப்படைந்திருக்கிறார்கள். நகரமெங்கும் பலத்த பந்தோபஸ்துச் செய்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பந்தோபஸ்தையும் மீறி கலாட்டாக்கள் நடந்து கொண்டு தானிருக்கின்றன இதற்கு யார் காரணம்? காலிகளா, அல்லது போலீசாரா? போலீசார் உஷாராக இருந்தால், கேவலம், கைப்பிடி அளவுள்ள காலிகளை நொடிப் பொழுதில் நசுக்கிவிட்டிருக்கலாம். சிற்சில இடங்களில், மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தைக் காட்டப் போலீசாரும், போலீஸ் அதிகாரிகளும் காலிகளுக்கு உடந்தையாகவே இருக்கிறார்களென்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. நான் இவ்வாறு கூறுவதைக் கண்டு சில போலீஸ் அதிகாரிகள் என்மேற் சீற்றங்கொள்ளலாம். ஆனால், நான் காரணமில்லாமல் போலீசார்மீது புகார் கூறவில்லை. காரணத்தோடுதான் கூறுகிறேன்.

* * *

சென்ற மாதம் 21ந் தேதி நடந்த காலிகளின் அட்டூழியம் கொஞ்சமல்ல. அந்த அட்டூழியங்களைக் கண்டு சென்னை மக்களின் இரத்தம் கொதித்தது பெரியார், மிக மிகப் பெரியார், ராமசாமியாருக்கும் அவருடன் சேர்ந்த சு. ம. பெரியாருக்கும் அந்த அட்டூழியம் பொய்யாக இருக்கலாம்! பார்ப்பன சூழ்ச்சியாக அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டிருக்கலாம்!! அல்லது, காங்கிரஸ்காரரின் "காலித்தனமாக" அவர்களுக்குத் தென்பட்டிருக்கலாம்!!! ஆனால், நடந்த அட்டூழியம் எப்பேர்ப்பட்டது, அந்த அட்டூழியங்களுக்குக் காரணம் யாரென்பதை சென்னை மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். போலீசாருக்கும் நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும் அந்தக் காலிகளுக்கு இன்னமும் ஏன் இடங்கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். சென்னை ஷண்முகராயன் வீதியில் ஒரு பிராமணர் ஹோட்டலைக் காலிகள் தாக்கி, அங்குள்ள ஒருவருக்கு மண்டையை உடைத்திருக்கிறார்கள். தனிப்பட்ட காங்கிரஸ்காரர் வீடுகளில் கற்களை எறிந்திருக்கிறார்கள். சிவனே என்று ரிக்ஷாவில் வேலைக்குச்சென்ற ராஜகோபால அய்யங்காரை மடக்கி, அடித்து அவரைப் படுகாயப்படுத்தியிருக்கிறார்கள். போலீசார் ஜாக்ரதையாக இருந்திருந்தால் இந்த அக்கிரமம் நடந்திருக்குமா? இன்று வரையில், அதே காலிகள், கற்கள் எறியும் கைங்கர்யத்தையும், ஜாதித் துவேஷத்தை உண்டுபண்ணும் கூக்குரல்களையும் விட்டபாடில்லை. அவர்கள் கூடும் இடங்களிலெல்லாம், அக்கிரமமான பதங்களையும், அற்பத்தனமான, நிசித வார்த்தைகளையுமே உபயோகித்து வருகிறார்கள். "ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க, தமிழ் நாடு தமிழருக்கே!' என்ற வார்த்தைகளை அவர்கள் உபயோகிப்பதை எந்தத் தமிழனும் ஆட்சேபிக்கமாட்டான் இந்த வார்த்தைகளைக்கேட்டு ஆத்திரமடையவுமாட்டான். ஆனால், சொல்லத் தகாத வார்த்தைகளை உபயோகிக்கும்போதுதான் தமிழருக்கு ஆத்திரமேற்படுகிறது.

* * *

இது போகட்டும்; சென்ற மாதம் 27ந் தேதி சூளை ராகவேந்திர ராவ் பார்க்கில் நடந்ததென்ன? அங்கு நடந்த அட்டூழியங்கள் பல. பலர் மண்டைகள் உடைந்தன; கல் வீச்சு, தடியடிப் பிரயோகம் சரமாரியாகவிருந்தது. போலீசார் முன்னெச்சரிக்கையுடன் நடந்திருந்தால் அந்தக் கலகம் வராமல் தடுத்திருக்கலாம். சூளையிலும் போலீசார் அவர்கள் மூளையைக் கடன் கொடுத்துவிட்டார்களென்றே நினைக்கிறேன்.

* * *

ஹிந்தி எதிர்ப்பு இறந்த ஆக்ரோஷத்தால், வெறிகொண்ட காலிகளும், சுயமரியாதைக் கூலிகளும், சென்னையிலும், இதர இடங்களிலும் செய்துவரும் காலித்தனம் சகிக்க முடியாமலிருக்கிறது. இதை அடக்க சர்க்கார் நினைக்கிறார்களில்லை. பொதுஜனங்களோ கொதிப்படைந்திருக்கிறார்கள். இந்தக் காலிகளைப் பொதுஜனங்கள் அடக்கத் துணிந்து விடுவார்களேயானால், என்னவாகும்? இந்தக் காலிகளின் கதி யாதாகும்? எங்கும் பெருங் குழப்பமேற்படுவது திண்ணம்: அந்தக் குழப்பத்துக்கு இடங்கொடாமல், காலித்தனம் செய்பவர்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டாவது, சர்க்கார் உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ராஜகோபாலாச்சாரியார் இவ்விஷயத்தில் இனிமேலும் பராமுகமாயிருப்பது கூடாது. அவர் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுவாராக.

* * *

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதில் சு. ம. காரர் பலே நிபுணர்கள்! சு. ம பத்திரிகைகள் இப்பொழுதே அந்த முடுச்சுப் போட ஆரம்பித்து விட்டன. சென்னைக் காலித்தனத்துக்குக் காங்கிரஸ் "காலிகள்" தான் காரணமாம்! காங்கிரஸ் ஆட்சியில், காங்கிரஸ் "காலிகள்" காலித்தனம் செய்ய "லைசென்ஸ்" எடுத்திருக்கிறார்களென்று, சுயமரியாதைக் காலிகள் செய்த காலித்தனத்தைக் காங்கிரஸ்மீது போடுகின்றன. காங்கிரஸ் ஆட்சியில், காங்கிரஸ் காலிகள் காலித்தனஞ் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. காலித்தனஞ் செய்யவும் அவர்களுக்குத் தெரியாது. கல்லெறி, மண்டை உடைப்பு, தடிஅடி என்பது காங்கிரஸ் அகராதியில் கிடையாது. சுயமரியாதை அகராதியில்தான் உண்டு அது அவர்களுக்குத்தான் "காப்பிரைட்"! காங்கிரஸ் ஆட்சியில் இந்த சுயமரியாதைக்காரர் செய்யும் காலித்தனத்தைப் பார்த்தால். அவர்களே காலித்தனத்தை ரிசர்வ் செய்து "புல் லைசென்ஸ்" எடுத்திருக்கிறார்களென்று நினைக்கிறேன். இதற்குக் காரணமென்ன? சுயமரியாதைக் காலிகளின் இறுமாப்புத்தான் காரணம். காங்கிரஸ் மந்திரிகள் சுயமரியாதைக்காரருக்குப் பயந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களை அடக்க முன் வரமாட்டார்கள்; காங்கிரஸ் மந்திரிகள் கோழைகளென்ற திமிரான எண்ணமே அவர்கள் காலித்தனத்துக்கு முக்கிய காரணம். இன்றேல், இவ்வளவு தைரியமாகவும், துணிகரமாகவும் பல ஆயிரக்கணக்கான போலீசாரும் போலீஸ் அதிகாரிகளும், ரிசர்வ் படையுமிருக்கும் சென்னை நகரத்தில் இவ்வளவு பகிரங்கமாகக் காலித்தனத்தில் இறங்குவார்களா? சென்னை மாகாணத்தின் தலை நகரத்திலேயே இவ்வளவு அட்டூழியமென்றால், போலீஸ் பந்தோபஸ்தே அபூர்வமாக இருக்கும் இடங்களில் என்ன அட்டூழியஞ் செய்ய மாட்டார்கள்? சென்னையில் நடந்த அட்டூழியங்களைப் பற்றி கேட்பார் கேள்வியைக் காணோம். இதர இடங்களில் நடக்கும் அட்டூழியங்களைப் பற்றிக் கேட்பானேன்! சென்ற வாரம் கேட்ட கேள்வியையே திரும்பவும் கேட்கிறேன். ஆச்சாரியார் தூங்குகிறாரா, அல்லது, விழித்துக் கொண்டிருக்கிறாரா?

* * *

போலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்தி விடுவதாலும், காலிகளை வெருட்டி விடுவதாலும் காலித்தனத்தை அடக்கிவிட முடியாது. இவ்வித காலித்தனத்துக்கு மூலகாரணமாய், திரை மறைவிலிருந்து வேலை செய்யும் பெருந் தேவதைகளைத் தேடிப் பிடித்து மடக்கவேண்டும். பொருளுதவி செய்வோர், ஆவேசத்தை உண்டுபண்ணவோர், முதலியோர் தலையைத்தான் முதலில் நசுக்கவேண்டும். சுயமரியாதை "பிரம்மா" ராமசாமி நாயக்கர்மீது வழக்குத் தொடர்ந்து விடுவதால், விஷமிகள் வேலை நின்று விடாது. ஈ. வெ. ராமசாமியார் பழம் பெருச்சாளி! சிறைப் பெருச்சாளி என்று சொல்லலாம். காங்கிரசிலிருந்த காலத்தில் மட்டும் அவர் சிறை செல்லவில்லை. கிரிமினல், சிவில் ஜெயிலில்கூட அவருக்கு நல்ல அனுபவமுண்டு! அவர் ஆச்சாரியார் நண்பர். ராமசாமியார்மீது வழக்குத் தொடருவதுகூட ஆச்சாரியாருக்குப் பரம சங்கடமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. ராமசாமியார், இன்று காங்கிரசையும், காந்திஜியையும் எவ்வளவு நிசிதமாக திட்டியபோதிலும், காங்கிரசும், காந்திஜியுமே நாயக்கரை மனிதனுக்கியதென்பதை ராமசாமியார்கூட மறுக்க முடியாது. வளர்த்த கடா மார்பில் பாய்வது போல், ராமசாமியார் அவரை வளர்த்தெடுத்துப் பேர் தேடிக் கொடுத்த காங்கிரஸ்மீது பாய்கிறார். நீட்டிய மரத்தில் கூர் பார்ப்பதுபோல், அவரைச்சாத்விகத்தில் பழக்கிய காந்திஜியை-உலக சிரேஷ்டரைக், கேவலம், மிருகத்தனமான வாழ்க்கை நடத்திய ரஷிய ராஸ்புடினுக்கு ஒப்பிட்டு இழிவு படுத்துகிறார். பெரியார், பெரியார் என்று கொண்டாடும் ராமசாமியாருக்கு இது அடுக்குமாவென்று கேட்கிறேன்.

* * *

ராமசாமியார் காங்கிரசுக்குச் செய்த சேவையை தமிழர் மறக்க முடியாது. தமிழ் நாடு காங்கிரசுக்கு நல்ல அரண் செய்தவர்களில் அவரும் ஒருவர். காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்த காலத்திலும், அவர் நல்ல சேவை செய்தார்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ஆனல், பதவி மோகம் பொல்லாதது. பதவிவெறி பிடித்துவிட்டால் அது குடிகாரனுக்குச் சமமாக்கிவிடும். தலைவர் பதவி ருசிகண்ட ராமசாமியாருக்குச் சதாகாலமும் தலைவர் பதவியிலேயே நாட்டம் ஏற்பட்டது. இத்துடன் காங்கிரஸ் பண மோசடியும் நடந்தது. ராமசாமியாருக்குக் காங்கிரசிலேயே இடமில்லாது போயிற்று. காங்கிரசிலிருந்து வெளியேறினர். காங்கிரசிலிருந்து வெளியேறிய மாஜி பக்தர்கள் எல்லோருக்கும் ஒரு வழக்கமுண்டு. காங்கிரசை எதிர்க்கப் புறப்பட்டுவிடுவார்கள். காங்கிரஸ் மோசமானது, காந்தி மோசடிக்காரர், அயோக்யர் என்ற பல்லவி பாட ஆரம்பித்து விடுவார்கள். அந்தக் கைங்கர்யத்தை ராமசாமியாரும் மறக்கவில்லை உடனே சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். கடவுள் இல்லை, மதம் பொய் என்ற பித்தலாட்டத்திலிறங்கினர். அவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. கடவுளையும், மதத்தையும் சொற்பக்காலத்துக்கு விட்டுவைத்தார். வகுப்புத் துவேஷத்திலிறங்கினர். பார்ப்பனீயம், பார்ப்பனியமென்று தனியில் அடித்துக்கொண்டார் ஜஸ்டிஸ் கட்சிக்கு உருண்டு போனர் அவருக்கு அங்கும் மதிப்பில்லை காங்கிரஸ்காரர் அதிகாரத்துக்கு வந்ததும், ராமசாமியார் தலையே புரண்டுவிட்டது. காங்கிரஸ் சர்க்காரை எதிர்ப்பதையே கடமையாகக்கொண்டார் தொட்டதுபட்டதற்கெல்லாம் காங்கிரஸ் மந்திரிகள் மீது குறை கூறிக்கொண்டு வந்தார். அப்பொழுதும் ஜனங்கள் அவரை ஆதரிக்கவில்லை. கடைசியாக ஹிந்திப் புரட்டை இழுத்துப்போட்டார். அந்தப் புரட்டு, எந்த நிலைமையில் வந்து முடிந்திருக்கிறதென்பதைத் தமிழர் அறிவார்கள். ராமசாமியாருக்கிருந்த அற்ப சொற்ப மதிப்பும் இத்தோடு குட்டிச்சுவராகிவிட்டது. அவரும் கோர்ட்டுக்கு ஏறவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இ. பி. கோ. 117 வது செக்ஷன் படியும், 1932ம் வருடக் கிரிமினல் திருத்தச் சட்டத்தின் 7 வது செக்ஷன் 1 வது பிரிவின்படியும் போலீசார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கு சென்னை மாகாண 4 வது மாஜிஸ்திரேட்முன் இம்மாதம் 5ந் தேதி விசாரணைக்கு வருமென்று தெரிகிறது. ராமசாமி நாயக்கர் எதிர் வழக்காடப் போவதில்லையென்று சு. ம. பத்திரிகைகள் கூறுகின்றன. அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை.

* * *

ராமசாமியார், அவருடைய வழக்கை உத்தேசித்துச் சென்னை வந்திருக்கிறார். சென்னைக்கு வந்த பின்னும், அவருடைய சிஷ்யர் செய்த அட்டூழியங்களைக் கண்டிக்க அவருக்கு மனம் வரவில்லை. அந்த அட்டூழியங்களெல்லாம் வெறும் கட்டுக் கதை என்கிறார். அது பொய்க் கதையா, அல்லது, மெய்க் கதையா வென்பதை சென்னை வாசிகள் அறிவார்கள். ராமசாமியார் அறிந்தாலும், அறியாததைப் போல் பாவனை செய்து கொள்ளப்

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. ஆனல், இந்தப் பழம் புளிக்குமென்பதை ராமசாமியார் இதற்குள் உணர்ந்திருப்பார். பெரியாரோ, சிறியாரோ, எனக்குத் தெரியாது. சர். பன்னீர் செல்வம் தலைமையில் சென்ற 27ந் தேதி சென்னைக் கடற்கரையில் ஒரு கூட்டம் நடந்தது. ராமசாமியாரும், பன்னீர்செல்வமும் 50 ஆயிரம், 60 ஆயிரம் கணக்கில் ஜனங்கள் திரண்டு வருவார்களென்று நினைத்தார்கள். கூட்டத்துக்கு 3000, அல்லது 4000 ஜனங்கள் தான் வந்திருப்பார்கள். ராமசாமியாருக்கும், பன்னீர் செல்வத்துக்கும் இடி விழுந்தது போலாயிற்று. அவர்கள் மனம் பிளந்து விட்டது! பன்னீர் செல்வம் பேச எழுந்த போதே பத்தாயிரக் கணக்கில் ஜனங்கள் வந்துகொண்டிருக்கிறார்களென்று கூறினர். கூட்டத்திலிருந்தவர்கள்கூட மெதுவாக நழுவ ஆரம்பித்தார்கள். ஏன்? அவர்களுக்குக் கற்கள் அபிஷேக எண்ணம் வந்து விட்டது. இந்தக் கூட்டத்துக்கு வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் தான் ஏராளம். "தமிழ் மணி" காரியாலயத்திலிருந்துகூட சுமார் 10 பேர் வேடிக்கைப் பார்க்க அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தார்களென்றால், இதுபோல் எத்தனை பேர் அந்தக் கூட்டத்துக்குப் போயிருப்பார்களென்பதை தமிழர் யூகித்துக் கொள்ளலாம்.

* * *

இதற்கு முன்நடந்த கூட்டங்களுக்கு, (சு. ம. பத்திரிகைகள் கூறியது போல் 50, 60 ஆயிரம் ஜனங்கள்) 15, 16 ஆயிரம் ஜனங்கள் கூடியதுண்டு. இப்பொழுது அவர்கள் கூட்டத்தைத் தீண்டுவாரைக் காணேம். ஏன்? காலிகளின் அட்டூழியங்களும் அவர்களின் முறையற்ற செயல்களுமேயாகும். நான் சென்ற வாரம் கூறியதுபோல், ராமசாமியார் இயக்கத்தைப் பொது ஜனங்கள் அறவே வெறுக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். அவருடைய இயக்கத்துக்குச் சாவு மணி அடித்தாகிவிட்டது. சு. ம. காலிகள் எறிந்த ஒவ்வொரு கல்லும் அவர்கள் இயக்கச் சவப்பெட்டிக்கு ஒவ்வொரு ஆணியாக மாறிவிட்டது.

* * *

சென்னைக் கடற்கரைக் கூட்டத்தைக் கண்டதும், பன்னீர்செல்வத்துக்கும் ராமசாமியாருக்கும் நாடி விழுந்துவிட்டது. ஈன சுரத்தில் பேசினர்கள். ராமசாமியார் கர்ஜனைகளெல்லாம் எங்கேயோ பறந்து விட்டன. சுயமரியாதைக்காரர் பலாத்காரத்தில் இறங்குவார்களேயானல், அவர் அந்த இயக்கத்திலிருந்து விலகிவிடுவதாகச் சொன்னர். இதைப் போலவே திருச்சியிலும் இதற்குமுன் ஒருமுறை சொன்னர். ஆனல் இதுவரையில் அவர் விலகிப் போகவில்லை. அவர் ஏற்கனவே விலகியிருந்திருப்பாரேயானல், இந்த அனர்த்தங்களெல்லாம் ஏற்பட்டே இருக்காது. ஆனல், தலைவிதி யாரை விட்டது? ராமசாமியாரின் தலைவிதி அவரை இன்று இந்த நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. அவருக்காக இரங்குவதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

* * *

இந்தச் சமயத்தில், தமிழ் நாட்டுத் தமிழ் பண்டிதர்களை நினைத்து அழுவதா, சிரிப்பதா வென்பது எனக்குத் தெரியவில்லை. சில பண்டிதர்கள், தமிழ்ப் புலவர்கள் தூங்குகிறார்களா, ஹிந்தியால் தமிழுக்கு ஆபத்து வந்து விட்டதே யென்று ஓலமிடுகிறார்கள்! சில அருணகிரிகளும், ஒன்றுக்கும் உதவாத "சோணகிரிகளும்" தமிழ்ப் புலவர்களைத் தட்டிக் கொடுக்கிறார்கள். தமிழ்ப் புலவர்கள்மீது எனக்கு ஒரு துவேஷமும் கிடையாது அவர்களிடம் எனக்கு நல்ல மதிப்புண்டு. ஆனல், தமிழ்ப் புலவர்கள் வறுமையில் ஆழ்ந்து கிடக்கிறவர்கள். அவர்கள் விழிப்படைந்த காலமே கிடையாது. அவர்கள் விழிப்படையப் போவதுமில்லை. தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டதென்று இப்பொழுது கூச்சல் போடும் சில சோணகிரிகள் தமிழ் எவ்வாறு கொலை செய்யப்படுகிறதென்பதைக் கவனித்தார்களா? சு. ம. பத்திரிகைகள் எழுதும் தமிழ் உண்மைத் தமிழா? தமிழைக் "கொலை" செய்கிறார்களே சு. ம. பத்திரிகைகளை ஆதரிக்கும் பண்டிதர்களும், அப்பத்திரிகைக்குச் செய்தி அனுப்புகிறவர்களும், சு. ம. தமிழ் எழுதுகிறார்களா, அல்லது, சுத்தமான தமிழ் எழுதுகிறார்களா? சுத்த தமிழ் எழுதினல், அவர்கள் தமிழைக் கொலைசெய்யும், சு. ம. காரர் அக்கிரமங்களையல்லவா முதலில் கண்டிக்கப் புறப்படவேண்டும். இதுவரையில் தமிழைப் பாதுகாக்க இந்தப் புலவர்களும், பண்டிதர்களும் என்ன செய்தார்கள், இனிமேல் என்ன செய்யப் போகிறார்கள்? தமிழ் பத்திரிகைகள் என்று கூறிக்கொண்டு, தமிழைக் கொலைசெய்யும் ராமசாமியார் செயலை முதலில் அவர்கள் ஒழிக்கட்டும்; அதன்பின் தமிழைப் பாதுகாக்கப் புறப்படட்டும். இது ஒன்றே தமிழைப் பாதுகாக்கப் பண்டிதர்கள் செய்யும் பெரும் சேவையாகும். பண்டிதர்களுக்கும் அந்த ஆண்மை வருமா? பொறுத்துப் பார்ப்போம்

* * *

சுயமரியாதை இயக்கத்தில் சில அதிகப்பிரசங்கிகள் இருக்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்களில் பெரும்பான்மையோரைத் தற்குறிகளென்றும், முட்டாள்களென்றும் எண்ணிக்கொண்டு என்னமெல்லாமோ, எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். இந்த மூடப் பிரகஸ்பதிகள் "மலை அடிகளும்" "மலை உச்சிகளும்" எழுதிய "அறிவுக் கொத்து" என்னும் ஆபாசக் கொத்திலிருந்து உதாரணம் எடுத்துக் காட்டுகிறார்கள். இந்த உலக்கைக் கொழுந்துகளுக்கு ஒன்று சொல்லுகிறேன். தாங்கள்தான் பெரிய பிரகஸ்பதிகள், அறிவுக் கொழுந்துகள் என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம். இவர்களைவிட மேதாவிகளும், அறிவுடையோர்களும் கோடிக் கணக்கில் வெளியிலிருக்கிறார்கள். இவர்கள் பேசுவதையும், செய்வதையும் கண்டிக்கவும், அதில் குற்றம் குறைகளிருப்பதை எடுத்துக் காட்டும் ஆற்றல் மிகுந்தவர்களும் ஏராளமாக உண்டு. இந்த மூடப் பிரகஸ்பதிகள், இனிமேலும் தமிழரை அவமதித்து, எழுதியும், பேசியும் வருவார்களேயானல், அதின் பயனை அவர்கள் அனுபவிக்க நேரிடுமென்பதை இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன்.

பிரகாசமான வெளிச்சத்தைக் கண்டால் தங்க மீன்கள் கண்களை மூடுவதே கிடையாது. இதனல் அவைகள் வருந்துகின்றன. சுமாரான வெளிச்சத்தில் தங்க மீன்களை வளர்த்தால் அவைகள் சந்தோஷமாக இருக்கின்றன.

"இந்திரா"
ஆர்ட் ரெகுலேட்டர்
அழகிலும், அமைப்பிலும்,
உயர்ந்த கேடியாரம்
15 வருடங்களுக்கு உத்தரவாதம்

ஒரு வாரத்துக்குச் சாவி கொடுக்காமலேயே ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும். ஒரு மணி, அரை மணி நேரம் அடித்துக் காட்டும் இன்பமான மணியோசை. வெள்ளி எனமல் டையல். தெளிவான உயர்ந்த கண்ணாடிகளுடன் கூடியது. பளபளப்பான பித்தளை வேலைப்பாடுகளுடன் கண்களை பறிக்கும் அழகு.
சிறியது ரூ. 20. நடுத்தரமானது ரூ. 25.
பெரியது ரூ. 30.
பாக்கிங், முதலிய இதர செலவுகள் வேறு.
ஆர்டர் செய்கிறவர்கள் தயவு செய்து ரூபாய் 5. அட்வான்ஸாக அனுப்பவேண்டும்.
ஜலால் அண்டு சன்ஸ்.,
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,
46, ரட்டன் பஜார், சென்னை.
—: பிராஞ்சு :—
மவுண்ட்ரோட், சென்னை.
அபிட்ரோட் ஹைதராபாத், டெக்கான்.

ஹிட்லருக்குப் படுகுழி!

வெள்ளையர் தந்திரம் — மூனிச் சதியின் ரகசியம்

மூனிச் துரோகத்தைக் கண்டு கொதிப்படையாத நாடுகள் இடையாது பிரிட்டனும், பிரான்சும் அவ்வளவுதான் சமாதானம் கூறியபோதிலும், பிரிட்டனிலும், பிரான்சிலும் அந்த ஒப்பந்தத்தைப் பலர் வெறுத்தே வருகிறார்கள் அது பாஸிஸ்ட் தேசங்களுக்குச் சலுகை காட்டியது போலாகிறது. மூனிச் சதியால் ஹிட்லர் கை ஓங்கிவிட்டது. முஸோலினிகூட உறுமஆரம்பித்துவிட்டார். இரு சர்வாதிகாரிகளும் சிலுசிலுப்பதைக்கண்டு பிரான்சும் பிரிட்டனும் நடுங்குகின்றன. எப்படியாவது இரு சர்வாதிகாரிகளையும் சமாதானமாக சமாளித்துக்கொண்டு போக விரும்புகின்றன அதற்காகவே பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேனும், அந்நிய நாட்டு மந்திரி ஹலிபாக்ஸும் பிரான்சுக்குக் காவடி எடுத்துக் கொண்டு போனார்கள். பிரிட்டிஷ் மந்திரிகளும், பிரஞ்சு மந்திரிகளும் கூடி ஆலோசித்தார்கள்; உடனே மற்றொரு செய்தி வெளி வந்தது. சேம்பர்லேன் முஸோலினியைக் காண ரோமாபுரிக்குப் போகிறாராம்!



மண்ணாசை பிடித்த சர்வாதிகாரிகளான ஹிட்லரும், முசோலினியும். மூனிச் துரோகத்தால் பிரிட்டனும் பிரான்சும் தங்களுக்குப் பணிந்துவிட்டதாக இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், இவர்களைப் படுகுழியில் தள்ள பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன் சதி செய்து வருகிறார்.

மந்திரி காவடி!

பிரிட்டிஷ் மந்திரி சேம்பர்லேன் ரோமாபுரிக்குப் போவது உண்மையாக இருக்கலாம். ஏனெனில். ஹிட்லரிடம் சரணாகதியடைந்து. பிரிட்டன்மானத்தை இழந்தவிட்டது உள்ள மானத்தையும் இழந்துவிடாமல் பாதுகாப்பதற்கு என்ன வழிகளுண்டோ, அந்த வழிகளையெல்லாம் சேம்பர்லேன், உபயோகித்துப் பார்க்கிறார். முஸோலினியைக்கண்டு அவரையாவது பிரிட்டன் பக்கம் சேர்த்துக் கொள்ள சேம்பர்லேன் நினைக்கிறார். அதற்காகவே அவர் முஸோலினியைக் காண அடுத்த மாதம் ரோமாபுரிக்குப் போகப் போகிறார். சேம்பர்லேன், முஸோலினியை கைவசப்படுத்தி விடலாமெனக் கனவு காணலாம்; ஆனால் அவர் கனவு பலிக்குமா வென்பதே கேள்வி. மண்ணாசை பிடித்த சர்வாதிகாரிகளுக்கு காலனிகள் வேண்டும். பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திவிட வேண்டுமென்றே அவர்கள் பகற் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஹிட்லருக்கு மத்திய ஐரோப்பா வேண்டும். முஸோலினிக்கு ஸ்பெய்ன் வேண்டும்; அரபிய தேசங்கள் வேண்டும்; மத்தியதரக்கடலில் இதாலியின் ஆதிக்கம் வேண்டும் இவ்வளவு பேராசை பிடித்த சர்வாதிகாரிகளை இலகுவில்வசப்படுத்த முடியாது. சேம்பர்லேன் இந்தச் சர்வாதிகாரிகளைத் தந்திரமாக வசப்படுத்திவிட நினைக்கிறார். அவர்களை வசப்படுத்துவதோடு மட்டுமல்ல, அவர்களை ஒரு படுகுழியில் தள்ள முயற்சிக்கிறாரென ரஷியப் பத்திரிகைகள் கூறுகின்றன. அது எவ்வாறு என்பதைக் கவனிப்போம்.



பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன். இவர் சமீபத்தில் பிரான்சுக்குச் சென்று டலாடியரைக் கண்டு பேசினார். சீக்கிரத்தில் ரோமாபுரிக்கு முசோலினியிடம் காவடி எடுத்துச் செல்லப் போவதாக தெரிகிறது. இவர் சூழ்ச்சி எங்கு போய் நிற்குமோ தெரியவில்லை.

> ஏந்தக் காரியத்தில் இறங்கியபோதிலும் பிரிட்டன் தந்திரமாக நடந்துகொள்ளும். சுயநலமே அதற்குப் பிரதானம். இதர தேசம் எக்கேடு கெட்டாலும், அதைப்பற்றி அதற்கு அக்கரையே கிடையாது. மூனிச்சில் ஜெக்கோவுக்குத் துரோகஞ் செய்தது. அதனால் பிரிட்டனுக்கே கேடு விளைவித்துக்கொண்டது என்றாலும், மூனிச் துரோகத்தைக் கொண்டே ஹிட்லரைப் படுகுழியில் தள்ளப் பிரிட்டன் சூழ்ச்சி செய்துவருவதாக, ரஷியப் பத்திரிகைகள் கூறுகின்றன. பிரிட்டனின் இந்தத் தந்திரம் பலிக்குமா, பலிக்காதாவென்பதைப் பொறுத்துப் பார்ப்போம

சேம்பர்லேனுக்குத் தானம் போடும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி லார்டு ஹலிபாக்ஸ்.

பிரிட்டன் தந்திரம்

பிரிட்டிஷ் முதன் மந்திரி ஹிட்லருக்குச் சரணாகதியடைந்தார். மூனிச் ஒப்பந்தம் அந்த சரணாகதியை ஊர்ஜிதப்படுத்துகிறது; அது வெறும் சரணாகதியல்ல. பிரிட்டன் செய்த ஒரு பெரிய தந்திரமென்றுதான் சொல்லவேண்டும் மூனிச் துரோகத்தின் வழியாகப் பிரிட்டிஷார் ஹிட்லருக்குக் குழி தோண்டிவிட்டார். அவரை ஒரு பாதாளத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிட சதிசெய்து வருகின்றனர். ஹிட்லரைமட்டுமல்ல; சோவியத் சர்க்காரையும் தொலைத்துவிட அவர்கள் நினைக்கிறார்களாம்! இதற்காகவே அவர்கள் பாஸிஸ்ட் சர்க்கார்களுடன் டகிரக்கமாக உறவு கொண்டாடுகின்றனர். பாஸிஸ்ட் சர்க்கார்மீது பிரிட்டிஷாருக்கு அநுதாபம் கிடையாது. என்றாலும், அந்த நாடுகளால் பிரிட்டனுக்கு ஆபத்து ஏற்படக்கூடுமென்ற பயம் பிரிட்டிஷாருக்கு உண்டு. ஆகவே, பாஸிஸ்ட் சர்க்காரின் சர்வாதிகாரிகளாக முஸோலினியையும், ஹிட்லரையும் சரிப்படுத்த பிரிட்டிஷ் மந்திரிகளும், பிரஞ்சு மந்திரிகளும் நினைக்கின்றனர். இதற்காகவே அந்தச் சர்வாதிகாரிகளுடன் கூடிக் குலாவி, ரகசியமாக அந்தச் சர்வாதிகாரிகளுக்குக் குழிதோண்டி வருகின்றனர். இந்தத் தந்திரத்தில் பிரிட்டனே முதன்மை வகிக்கிறது.



பிரஞ்சு முதன் மந்திரி டலாடியர் இவரும் சேம்பர்லேனுடன் சேர்ந்து, ஹிட்லரையும், முசோலினியையும் படுகுழியில் தள்ள சதி செய்கிறார்.

படு குழி என்ன ?

ஜெக்கோஸ்லேவோகியாவையும், ஆஸ்திரியாவையும் ஹிட்லர் கைப்பற்றிக் கொள்ள பிரிட்டனும், பிரான்சும் ஒப்புக் கொண்டதில் ஒரு ரகசியமுண்டு. ஜெக்கோஸ

(அடுத்த பக்கம் பார்க்க)

ஹிட்லருக்குப் படுகுழி

ஜெக்கோவை ஹிட்லருக்குப் பலி கொடுத்த பிரிட்டனும், பிரான்சும் சுயநல நோக்கங் கொண்டே அவ்வாறு செய்தன. ஹிட்லரைக் கொண்டு ரஷியாவையும், அதன் பின் ஹிட்லரையும் படுகுழியில் தள்ளவே அந்த சூழ்ச்சி செய்திருப்பதாக ரஷியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

யும், ஆஸ்திரியாவையும் ஹிட்லர் எடுத்துக் கொள்ள விடாமல் முட்டுக் கட்டை போட்டால், ஜெர்மனி கட்டாயம் யுத்தம் ஆரம்பிக்கும் அவ்வாறு யுத்தம் ஆரம்பித்தால், ஜெர்மனி முதன் முதலில் பிரான்சையே தாக்கும். ஜெர்மனி பிரான்சைத் தாக்கினால், பிரிட்டன் கட்டாயம் அதற்கு உதவிக்குப் போயே ஆக வேண்டும். பிரான்சுக்கு உதவிக்குப் போகாமலிருக்க முடியாது போகாமலிருந்தாலும் ஆபத்து! ஆகவே ஜெர்மனியின் எண்ணத்தை வேறு வழியில் திருப்ப, பிரிட்டனும், பிரான்சும் ஒன்று சேர்ந்து ஜெக்கோவை ஜெர்மனிக்கு அர்ப்பணஞ் செய்தன. ஆஸ்திரியாவையும் ஜெர்மனி ஏற்கனவே கைப்பற்றியிருப்பதால், ஹிட்லருக்கு ஐரோப்பாவின் மேற்குப் பக்கத்தில் எண்ணமில்லை. அவர் எண்ணமெல்லாம் ஐரோப்பாவின் கிழக்குப் பக்கமே பதிந்து கிடக்கிறது ஆஸ்திரியா, ஜெக்கோ முதலிய தேசங்களை கைப்பற்றியதோடு, அதற்கடுத்தாற் போலுள்ள ,சிறு தேசங்களை கைப்பற்றுவதில் அவர் எண்ணம் போய்க் கொண்டிருக்கிறது. ஹங்கேரி, போலந்து, ருமேனியா முதலிய தேசங்களைக் கைப்பற்ற ஹிட்லர் யோசனை போட்டிருக்கிறார்.

ரஷியா மீது பாயலாம்

ஜெர்மனிக்குப் பரம எதிரி ரஷியா. ரஷியாவை எதிர்க்க ஹிட்லர் உறுதி கொண்டிருக்கிறார். ஜெர்மனி தற்போதிருக்கும் நிலைமையில் ரஷியாவை நெருங்க முடியாது. ஆகவே, சிறு தேசங்களாகிய ருமேனியா, போலந்து, ஹங்கேரி முதலிய தேசங்கள் முழுவதையும் ஜெர்மனி ஆட்சிக்குக் கொண்டுவந்த பின் ஹிட்லர் ரஷியாவை எதிர்க்க தீர்மானித்திருக்கிறார். ரஷியாமீது ஜெர்மனிக்கும், இதாலிக்கும் எவ்வளவு ஆவேஷமுண்டோ, அவ்வளவு ஆவேஷம் பிரிட்டனுக்கு முண்டு ரஷியாவை எப்படியும் அடியழித்துத் தீரவேண்டுமென்பது பிரிட்டன் ஆவல். பிரிட்டன் தனியாக ரஷியாவை எதிர்க்கமுடியாது. ஆகவே, ரஷியாவை எதிர்க்கும்படி ஜெர்மனியைத் தூண்டுகிறது. நேரடியாக அல்ல; மறைமுகமாக ஜெக்கோ, ருமேனியாவைக் கைப்பற்றிவிட்டால், அடுத்தாற் போல் ரஷியாமீதுதான் ஜெர்மனி பாய நினைக்கும். ஹிட்லருக்கு இந்த வழியைக் காட்டவே, பிரிட்டன் மூனிச் துரோகத்துக்கு ஒப்புக்கொண்டது ஹிட்லர் ஐரோப்பாவின் கிழக்குப் பாகத்தில் அவருடைய கவனத்தைச்செலுத்துவார். மேற்குப் பாகத்தில் அவர் கவனம் செல்லாது. அதுவரையில் பிரிட்டனும், பிரான்சும் ஒருவகையில் நிம்மதியாக விருக்கலாம். சேம்பர்லேன் தந்திரம் இதுதான்.

அடுத்த எதிரி

பிரிட்டனுக்கு, ரஷியா மட்டும் எதிரியல்ல ஜெர்மனி, இதாலியைப்போல் ஜப்பானும் ஒரு பெரிய எதிரி ஜப்பான் பிரிட்டன் தன்னைத் தட்டத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறது பிரிட்டனோ ஜப்பானை நசுக்கச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஜப்பானைத் தனியாக எதிர்க்கப் பிரிட்டனுக்குத் தைரியம் கிடையாது. அப்படி எதிர்க்கவும் முடியாது. ஆகவே, ஜப்பானுடன் உறவாடும், ஜெர்மனி இதாலியைக் கொண்டே ஜப்பானை நசுக்கவும் அது வழிதேடுகிறது. ஜப்பானை நசுக்க ஜெர்மனிதான் பிரிட்டனுக்கு அதிக உதவியாக இருக்கும். ஜெர்மனியைக் கொண்டே ஜப்பான ஆணவத்தையும் மடக்க பிரிட்டிஷார் நினைக்கிறார்கள். ஜெர்மனி, ஜப்பான், ரஷியா, இதாலி முதலிய தேசங்களுக்குக் குழிதோண்ட பிரிட்டிஷார் இந்தத் தந்திரஞ் செய்கிறார்கள் அந்தப் படுகுழியில் மேலே கூறிய தேசங்கள் விழுமா, அல்லது, பிரிட்டன் தோண்டிய குழியில் அதுவே விழுந்து தள்ளாடப் போகிறதா? பிரிட்டன் தோண்டும் குழி பிரிட்டனுக்கே ஆபத்தாகவந்து முடியும். பிரிட்டன் செய்யும் வினை, பிரிட்டனையே சூழ்ந்து நின்று வருத்துமென்பதில் சந்தேகமில்லை.



ஐரோப்பாவிலிருந்து பண்டித ஜவார்லால் பம்பாய் வந்து இறங்கியதும், பம்பாய் மக்கள் அவரை ஆடம்பரத்துடன் வரவேற்றார்கள். பம்பாயில் நடந்த ஒரு பொதுக்கூட்டதித்ல் பண்டித ஜவார்லால் பேசியபோது எடுத்த படம்.

டாட்ஜ் — பத்திரமான கார்

பிரயாணஞ் செய்வதற்கும், விலை கொடுத்து வாங்குவதற்கும் பத்திரமான கார்.

இந்தக் கார் இவ்வளவு பத்திரமாக இருப்பதற்கு ஏற்ற முறையில் டாட்ஜ் இஞ்சினீர்கள் விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். விசேஷ உறுதியுள்ள உருக்கு இரும்பு பாடி, பத்திரமான கைப்பிடிகள், இழுக்கும் சக்தியும், ரோடுகளில் திறமையாகவும், வேகமாகவும் செல்லக் கூடியது. உறுதியான ஹைட்ராலிக் பிரேக், முன் சீட்டுகளில் சாய்ந்து கொள்ளுவதற்கு ஏற்ற சௌகரியமான சாய்மானங்கள்; உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்ட பிளஷ் பானல்ஸ், சீக்கிரத்தில் போடக் கூடிய பிரேக்குகள் முதலியவைகளே டாட்ஜ் கார்களின் விசேஷ அமைப்புகளாகும். இன்று ரோடுகளில் ஓடக்கூடிய கார்களில் பத்திரமான அம்சங்கள் பொருந்தியவை டாட்ஜ் கார்கள் தான்!



அடிசன் அண்டு கம்பெனி, லிமிடெட்.
மதராஸ், பெங்களூர், திருச்சி, விசாகபட்டணம், உதகமண்டலம்.

தமிழ் நாட்டுக்கு அதிகாரம்பெற்ற ஜில்லா டீலர்கள்:—
Ar. A. செண்பக நாடார், ஃ P. V. P. வாலசுப்பிரமணிய நாடார், மதுரை ஃ திருநெல்வேலி.
தி மாடர்ன் மோட்டார் ஃ ஜெனரல் டிரேடிங் கம்பெனி, தஞ்சாவூர்.

இனும்! * இனும்!

¾ அணா ஸ்டாம்ப் அனுப்புகிறவர்களுக்கு குல்பஹார் ஹேர் ஆயில் சாம்பில் புட்டி 1, இனாமாக அனுப்பப்படும்.

—: தயாரிப்பவர்கள் :—
தாஜ்முல் ஹுசெய்ன்
வாசனைத் திரவிய வியாபாரி
அலிஸ்ரோடு மவுண்ட்ரோடு, மதராஸ்.

T. Kuppuswamy Naidu
OPTICIAN

120 & 121, Moor Market: Madras.
PLEASE PAY US A VISIT

TRADE MARK
Registered.

இரும்பு இருமலுக்கு ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச லேகியம்
சைகண்ட ஔஷதம்
எங்கும் கிடைக்கும்
ஜீ. எஸ். ஸ்டியர்ஸ் கம்பெனி,
21, வீரபாகு செட்டி வீதி, மதராஸ்.



உங்களுக்குத் தெரியுமா?

பாடும் அரண்மனை!

சொகுசான வாழ்க்கை நடத்துவதில பேர் போனவர்கள் இந்திய மகாராஜாக்கள். உலகமெங்கும் இவர்கள் டம்பாச்சாரித்தனம் தெரியும். இவர்கள் ஐரோப்பாவிற்குப் போய்விட்டால், அங்குள்ள வர்த்தகர்களுக்குக் கொண்டாட்டந்தான்! ஜெயப்பூர் மகாராஜாவும் சொகுசான வாழ்க்கைக்குப் பேர் போனவர். அவருடையதலை நகரான ஜெய்பூர் நகரில் ஒரு பெரிய அரண்மனை கட்டியிருக்கிறார். அதைக் கட்டி முடிக்க அவருக்குச் சுமார் 15 கோடி ரூபாய் செலவானதாம். அந்த அரண்மனையிலேயே அவருக்குச் சகல சுகபோகங்களுமிருக்கின்றன. அரண்மனைக்குள்ளாகவே ஒரு சிறு ரயில் வண்டி ஓடுகிறதாம்! ஸ்நான அறைக்கு மகாராஜா அந்த ரயில் வண்டியில்தான் பிரயாணஞ் செய்வது வழக்கமாம்! அவர் சாப்பிடுகிற அறைக்குக் கூட மின்சார சக்தியின் உதவியால் ஆகாரங்கள் வந்து சேருமாம் அந்த அரண்மனையில் சுமார் 3463 ஜன்னல்களிருக்கின்றன. சுகமான காற்றோட்டம் காற்றோட்டமட்டுமல்ல, காற்று அடித்ததும் ஒவ்வொரு ஜன்னலும் இனிமையாகப் பாடுகிறது காற்றின் வேகத்தால் பாடக்கூடிய கருவிகளை அந்த ஜன்னல்களில் அடைத்திருக்கிறார்கள்.

வேலையில்லாத் தொல்லை

வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டிருப்பவர்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். நமது பிரிட்டனில் மட்டுமல்ல, ஐரோப்பாவில் கூட ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களுடைய கஷ்டம் சொல்லி முடியாது. தற்கொலை செய்துகொள்ளுபவர்கள் பலர். கஷ்டத்தால் குடும்பத்தை வெறுத்து ஓடியவர்கள் பலர். ஆஸ்திரியாவில், வியன்னா நகரத்தில் வசித்துவந்த ஒருவர் திடீரென மாயமாய் மறைந்து விட்டார். இவர் நன்கு கற்றவர். நெடுங்காலமாக இவரை காணவில்லை. சமீபத்தில் சிலர் ஒய்ச்பெர்க் என்னும் மலைப்பிரதேசத்துக்குச் சென்றார்கள். அங்குள்ள குகை பொன்றில் ஒருவர் மீசை தாடி வளர்த்து ஒரு பெரிய மகான் போல் தனி வாழ்க்கை நடத்தி வருவதாகக் கண்டார்கள். அந்தச் சந்நியாசி, அவர்களைக் கண்டதும் காட்டிற்குள் ஓட்டமெடுத்தார் என்றும் அவர் சிறிது நேரத்திற்குப் பின் திரும்பி குகைக்கு வந்தார். அங்கு அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தவர்களிடம் சிறிது நேரம் பேசினர். அவரே வியன்னாவிலிருந்து மாயமாக மறைந்தவர். வேலையில்லாத வெறுப்பில் காட்டிற்கு ஓடி விட்டார். அங்கு இலை தழைகளைத் தின்று ஜீவித்து வருகிறார். உலகத்தையே வெறுத்துவிட்டார். உலக நாகரிகம் அவருக்குப் பிடிக்கவில்லை மீண்டும் உலகத்துக்கு வர அவர் விரும்பவில்லை அந்தக் குகையிலேயே நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்.



வாயாடி மனைவிக்குச் சூடு!

பேயோடு வாழ்ந்தாலும் வாழலாம்; வாயாடி மனைவியோடு வாழ முடியாது! இதை அறிந்தே, சற்றும் ஏறுமாறாக நடக்கும் மனைவியுடன் கூடி வாழுவதைவிடக் கூறாமல் சந்நியாசம் கொள் என்றாள் ஔவைக் கிழவி. ஔவை பாடியது நல்ல கருத்து. ஆனால், அந்தக் கருத்து ஒரு அமெரிக்கருக்குப் பிடிக்கவில்லை அவருடைய வாயாடி மனைவியை எப்படியும் அடக்கிவிட அவர் தீர்மானித்திருந்தார். அந்த அமெரிக்கர் போவிலினியன் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறார். அவர் மனைவியோ பெரிய வாயாடி. மனைவியை சரிக்கட்ட எவ்வளவோ முயற்சித்தார். முடியவில்லை. ஒரு நாள் அவருக்கே ஆத்திரம் வந்துவிட்டது. கத்தியை எடுத்தார், மனைவியின் நாக்கை பிடித்து நுனி நாக்கைத் துண்டித்து விட்டார். மனைவி கூக்குரலிட்டாள். அவ்வளவுதான். மறுநாள் கணவர் மீது வழக்குத் தொடர்ந்தாள். ஆனால், அவளுக்கு நல்ல புத்தி வந்தது. வாயாடித்தனம் ஒழிந்தது. கணவன் செய்த காரியத்தால அவள் வாயாடித்தனம் நின்று விட்டதாகக் கூறி, மாஜிஸ்திரேட்டிடம் வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டாள். இப்போது கணவருடன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி வருகிறாள்.

ஆயுள் அழிக்கும் ஊற்று!

ஜப்பானில், ஷிரா ஹோன் என்னுமிடத்தில் ஒரு அபூர்வமான நீர் வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர் வீழ்ச்சியிலிருந்து உற்பத்தியாகும் ஜலத்துக்கு நீடிய ஆயுள் அளிக்கும் சக்தி இருக்கிறதாம. ஆகவே, அந்த ஜலம் வரும் சிறு ஊற்றுகளில் ஜப்பானியர் இரவு பகலாக, மூன்று வாரங்களுக்குப் படுத்துக் கொள்ளுகிறார்கள் அந்த ஊற்றிலேயே நித்திரை செய்வதுமுண்டு. 3 வாரங்கள் ஜலத்தில் தங்கியிருந்த போதிலும், எந்த விதமான கெடுதியும் ஏற்படுவதில்லையாம்! இந்த ஊற்றுக்கு சாதாரணமான ஜனங்கள் போகமுடியாது. பெரும்பாலும் ஜப்பான் தனவந்தர்களே போகிறார்கள். மாதக்கணக்கில் அங்கு தங்கியிருந்து வருகிறார்கள்.

விசித்திர கெடியாரம்!

இங்கிலாந்தில் நியூடவுன் என்னுமிடத்தில் வசித்துவரும் ஜி. டப்ளியூ மார்ல்ட்ளப் என்பவர், அவருடைய ஓய்வு நேரங்களில் ஒரு கெடியாரம் செய்து வந்தார். அந்தக் கெடியாரத்துக்கு சாதாரண தகரம் சைக்கில் மணி, பழைய சயக்கு ஆண்டெனாவே உபயோகித்தார். அந்தக் கெடியாரத்தைச் செய்து முடிக்க அவருக்கு 30 வருடங்கள் பிடித்தன. சுமார் 4 பவுன் செலவு செய்தார் அந்தக் கெடியாரம் இன்னமும் ஓடிக் கொண்டுதானிருக்கிறது சரியான நேரம் காட்டுகிறது நேரம் மட்டுமல்ல; தேதி, நாள், வாரம, மாதம முதலியவைகளைக் கூடக் காட்டுகிறது. இதர தேசங்களில் நேரமென்ன வென்பதையும், சந்திரன் பூமியைச் சுற்றி வருவதையும அதுகாட்டுகிறது.

மதயானைக் குளிகை

தண்ணீர்போல் உடைந்து நீர்த்துப்போகும் இந்திரியத்தை இறுக்கிக் கட்டி, மணியாக்கி, நாடி நரம்புகளை முறுக்கேற்றி, இல்லற இன்பத்தில் மதங்கொண்ட யானையைப்போல் அடக்க முடியாத அபார ஊக்கத்தைக் கொடுத்து நீண்ட நேரம் சுகம் அனுபவிக்கலாம். இதன் ரகசியம் அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இப்படியும் ஒரு தாதுபுஷ்டி குளிகை உண்டா? என்று பிரமித்து விடுவார்கள். 5; குளிகை ரூ 5 (25 குளிகை ரூ. 3.)

விலாசம்:—கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி, S. I. R.



புறுக்களுக்கு இயற்கையிலேயே ரேடியோ சக்தி வாய்ந்த காதுகள் அமைந்திருப்பதாக டாக்டர். ஜே பீல் கூறுகிறார். புறுக்கள் ஆகாயத்தில் பறந்து செல்லும்போது தரையில் என்ன நடக்கிறதென்பதைப் பார்க்கவும் கேட்கவும் முடியலாம். அவைகள் எஜமானர் வீடுகளைத் தேடி வருவதற்கு இந்த ரேடியோ சக்திதான் காரணமென்று அவர் கூறுகிறார்.

* * *

பாரிஸ் பொருட் காட்சி சாலையில் சுமார் 1,00,000 வகையான வண்ணாத்திப் பூச்சிகளிருக்கின்றன. இந்த வண்ணாத்திப் பூச்சிகள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் கொண்டு வரப்பட்டன.

* * *

மோட்டார் பந்தயத்துக்காக ஜெக்கோஸ்லா தனி ரோடுகள் அமைத்திருக்கிறார்கள். அந்த ரோடில் வழுக்கக் கூடாத கண்ணாடிகளைப் பதித்திருக்கிறார்கள். மோட்டார்கள் ஓடுவதற்கு அவை பெரிதும் பயன்படுகின்றன. அந்தக் கண்ணாடி இலகுவில் உடைவதுமில்லை.

* * *

அந்நிங்கில் என்னுமிடத்தில் ஒரு பெண், ஒரு சிறு கைக் குழந்தையுடன் மார்க்கெட்டுக்குச் சென்றாள். குழந்தை பிறந்து ஒரு வாரந்தானிருக்கும். வறுமையால் குழந்தையை விற்க முயற்சித்தாள். அந்தக் குழந்தையை வாங்குவார் யாருமில்லை. இறுதியில் ஒருவர் 5 முழுத் துண்டுக்கு அந்தக் குழந்தையைக் கேட்டார். தாய் குழந்தையை 5 முழுத் துண்டுக்கு விற்று விட்டுப் போய் விட்டாள்!

* * *

அமெரிக்காவில் ரிஸ்வுட் என்னும் கிராமத்துக்குச் சமீபத்தில் ஒரு பாலமிருக்கிறது. அந்தப் பாலத்துக்கு எந்தவிதமான நஷ்டமுண்டுபண்ணினாலும் அவர்களுக்கு 7 வருடம் சிறைத்தண்டனை கிடைக்குமென்றும், இன்றேல், நாடுகடத்தப்படுவார்களென்றும் ஒரு சட்டமிருந்தது. அவ்வித் சட்டத்தை எழுதித் தொங்கவிட்டிருக்கும் போர்டு ஒன்று இன்னமும் அந்தப் பாலத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது.

டச் கயனாவிலுள்ள பெண்களே, ஆடவருக்குப் பதிலாக வேலை செய்கிறார்கள். அந்தப் பெண்கள் எந்தப் பொருளையும் சுமந்தே செல்லுவதுண்டு. கையில் எதையும் கொண்டு போவது கிடையாது. ஒரு துண்டுக் காகிதத்தைக் கூடக் கையில் எடுத்துக் கொண்டு போவதில்லை. காகிதத்தைத் தலையில் வைத்து, அதைக் காற்று அடித்துக் கொண்டு போகாமல் காகிதத்தின் மேல் ஒரு கல்லை வைத்தாவது சுமந்து கொண்டு போவது வழக்கமாம்! கையில் எதையும் எடுத்துக் கொண்டு போவதில் அந்தப் பெண்களுக்கு அவ்வளவு வெறுப்பு!

* * *

அம்பு, வில் முதலியவைகளைப் பிரயோகிப்பதில் டாரஸ்கான் என்னும் பிரதேசத்தில் வசிக்கும் மெக்ஸிகோ இந்தியர்கள்தான் பேர் பெற்றவர்களாம். சுமார் 30 அடி தூரத்தில் ஒரு அரிசியை வைத்திருந்தபோதிலும், அவர்கள் அந்த அரிசியை அம்பால் எய்து, இரு துண்டாகப் பிளந்து விடுவார்களாம்!

* * *

தெற்குத் திருவாங்கூரில் பெச்சுப் பாரா என்னுமிடத்தில் ஒரு கிராமவாசி, தற்செயலாக ஒரு பாம்பை மிதித்துவிட்டார். அது நாகப் பாம்பு. சுமார் 13 அடி நீளமும் 8 அங்குல சுற்றளவுமுள்ளது. அந்தப் பாம்பு அவரைக் கடிக்க முயன்றதும், அவர் வெகு சாதுர்யமாகத் தப்பித்துக்கொண்டார். சுமார் 2 மணிநேரம் அந்தப் பாம்புடன் சண்டைபோட்டு அதைப் பிடித்துக்கொண்டார். அந்தப் பாம்பு தற்போது திருவாங்கூர் மிருகக் காட்சி சாலையில் இருக்கிறது.

* * *

காற்றிலிருந்தே மின்சார சக்தியை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு நவீன இயந்திரத்தை பெல்கிரேடில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த இயந்திரத்தை அபிவிருத்தி செய்வார்களேயானால், மின்சார சக்தியை உற்பத்தி செய்ய நிலக்கரி, பெட்ரோல், எண்ணெய் முதலியவைகள் தேவை இருக்காது.

பூமிக்கும், சந்திரனுக்கும் சுமார் 239000 மைல் தூரமிருக்குமெனக் கணக்கெடுத்திருக்கிறார்கள் என்றும், பூமியிலிருந்தபடியே சந்திரனைப் புகைப்படமெடுத்துச் சந்திரனிலுள்ள மலைகள், நதிகளைக் காட்டும் பெரிய தேசப்படமொன்றைத் தயாரித்திருக்கிறார்கள். இவ்வித தேசப்படமொன்று வாஷிங்டன் நகரிலிருக்கிறது

* * *

ஐரோப்பாவில் கிறிஸ்துமத சம்பந்தமாகப் பாடும் பாட்டுகள் மொத்தம் 4,00,000. அவைகளில் 1,00,000 பாட்டுகள் ஜெர்மன் பண்டிதர்களால் பாடப்பட்டவை. ஆனால், தற்போது பல தேசத்தினராலும் பாடப்படும் பாட்டுகள் வெகு சொற்பந்தான்.

* * *

இங்கிலாந்தில் வேலையில்லாத் திண்டாட்டத்திலகப்பட்ட இருவர் வேலைதேடி 12 மாதங்களாகப் பல ஊர்களில் அலைந்து திரிந்தனர். இவர்கள் இருவருக்கும் சைக்கிள்கள் உண்டு. 12 மாதங்களிலும் இருவரும் சுமார் 52,108 மைல் சுற்றினார்களெனத் தெரிகிறது.

* * *

லண்டன் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு சிறு வால் ஒன்று இருந்தது. அந்த வால் தற்போது 2 அங்குல நீளம் வளர்ந்திருக்கிறதாம்!

* * *

எலி, சுண்டெலி, கோழி முதலியவைகள் சாராயம், கள் முதலிய லாகிரி வஸ்துக்களைக் குடித்தபோதிலும், அதனால் அவைகளுக்குக் கெடுதி இல்லையாம்.

* * *

ரோமாபுரி நகரில் வசித்து வந்த செசாரே செக்ரி என்னும் ஒரு இத்தாலியர் 1799-ம் வருடத்திலேயே தீ குச்சி செய்யும் முறையைக் கண்டுபிடித்தாரென ஒரு இத்தாலியர் கூறுகிறார்

* * *

ஆல்ப்ஸ் மலையைக் குடைந்து ரயில் பாதைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். "சிம்பிளன் குகை" என்னும் குகைதான் 'உலகத்திலேயே பெரியதாகும். இதன் நீளம் $12\frac{1}{2}$ மைல்.

பெருங்காயத்தில் சிறந்தது

N. K. S.

பெருங்காயம் தான்
ஒரு முறை பரீக்ஷித்தால்
உண்மை விளங்கும்.

காரன்தாஸ் கேசூர்தாஸ்
அன் சன்ஸ்
பெருங்காய வியாபாரிகள்
1-204, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு
ஜி. டி. மதராஸ்
தலைமை ஆபீஸ்: "வடகாசி" பாம்பே கிளை ஆபீஸ்:—
கும்பகோணம்.

மேக வியாதி

என்னும் விஷப்பாம்பைக் கொன்று தேகாரோக்கியத்தைப் பெற்று இன்பமான இல்லற வாழ்க்கையை அனுபவிக்க

பங்காமிருதவடி

என்னும் மருந்து தகுந்த உபாயம்
20 மாத்திரையடங்கிய டப்பி ரூ.1-12
40 " " ரூ.3-0
மதன மஞ்சரி பார்மஸி,
1-94 சைனாபஜார் ரோட் மதராஸ்.
513 சுலையா தெரு, பினாங்கு.
ஏஜண்ட்: - ஐலோரியன் ஸ்டோர்ஸ்,

விலை ரூபா 1-0-0



மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.



M. A. CHARI & CO.,
Ophthalmic Opticians,
8-9, BROADWAY, MADRAS.

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம்
பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ்.
(ஏஜண்டுகள் தேவை)

வற்று பொக்கிஷம்

தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்ட இலட்சக்கணக்கான ஜனங்களை எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

காப்பாற்றி வந்திருக்கின்றன. சென்ற 57 வருஷங்களாக நாங்கள் கேட்காமலே வந்து குவிகின்ற நற்சாக்ஷிப் பத்திரங்களே மேற்படி மாத்திரைகள் குணங்கொடுப்பதில் குன்றாத பொக்கிஷமென்பதை நிரூபிக்கின்றன.

நீங்களும் உபயோகித்து குணத்தையடையுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0

இனம்! போஜன விதிகள் இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

வளையல் வாங்கலியோ வளையல்!

மதராஸ் டி. சி. என்
கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்



அசல் தங்க வளையல்களை விட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2வருஷ உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ. 3 0 0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள் ஜதை	ரூ. 2 8 0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$-க்கு உட்பட்டது ஜதை	ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை	அணா 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

குறிப்பு:-"தமிழ் மணி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனம்.

குறிப்பு:—ஸிலோன் பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணா 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
230, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதறாஸ்.

ஏஜண்ட்:— க. தர்மலிங்க முதலியார்,
நெ. 101, இராஜவீதி, குமரகோஷ்டம் பக்கத்தில், பெரிய காஞ்சிபுரம்.

குணத்தில் உயர்ந்தது!
மணத்தில் சிறந்தது!!
சகலருக்கும் உகந்தது!!!

"வீனஸ்"

நறுமண பாக்குத்தூளே!

ஏஜண்டுகள் தேவை
திருச்சினாப்பள்ளி, கோயமுத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிலோன், சிங்கப்பூர், ரங்கூன்.

வீனஸ் கம்பெனி,
360 பைகிராப்ட்ஸ் ரோடு,
ராயப்பேட்டை மதறாஸ்.

பிரயாணத்திலும் சரி வீட்டிலும் சரி

ருக்மணி குக்கர்

விபர புஸ்தகம் இனம்

அடுக்கு ஒன்று இருந்தால் சமையல் கவலையே இராது:

1 முதல் 16 பேர்களுக்கு 7 அளவுகள் உண்டு

குக்கர்கள் விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.

ருக்மணி குக்கர் கம்பெனி
14, கிழக்கு மாதாகோவில் வீதி,
ராயபுரம், சென்னை

கர்ப்ப சஞ்சீவி எண்ணெய்

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். ருதுக க்ஷயம், ருதுக சூலை, ருதுக ஜுரம், ருதுக வாய்வு, ருதுக கட்டு, ருதுகச் சிக்கல், ருதுகத் திரக்ஷி, ருதுகக் கட்டினுல் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள், உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்ருவித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலவீனம், ருதுக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கர்ப்பப்பை சுத்திகரிப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 வித மலடு தீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

கபருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்
சித்த வைத்தியசாலை பழனி. S. I.

பிராஞ்ச்:—16, திருவல்லிகேணி ஹைரோடு, சென்னை.

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும்

மோட்டார்கார் ஓட்டவும், மோட்டார்கார் பாகங்களை கழற்றவும், பூட்டவும் ரிப்பேர் முதலான வேலைகள் தெரிந்துகொள்ளவும் விரும்புகிறவர்கள் எங்களிடமுள்ள "மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும்" என்ற நூலை வாங்கிப் படித்து பயன் பெறுவார்களாக. சித்திரங்களுடன் வெளிவந்திருக்கிறது. இப் புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் அதிக நன்மையடைவார்கள். சொற்ப அநுபோகமுள்ள மோட்டார்கார் டிரைவர்களும் இப் புத்தகத்தை படிப்பதினுல் தங்களிடத்திலுள்ள குறைகளை நிவிர்த்தித்துக் கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2-0-0 தபால் செலவு ரூ. 0-6-0

முன்பணமாக ரூ. 2-6-0 அனுப்பப்படவேண்டும்.

மானேஜர், "தமிழ் மணி" சென்னை.

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா
2—8—0
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 6
ஆறு மாதத்திற்கு
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி



பர்மா, மலாய்
தனிப்பிரதி 0-1-3
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

தனிமை வேண்டும் அடிமை வேண்டும் எவனுமில்லை, ஜாதியில் இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே,
என்று தணியு மிந்த சுதந்திர தாகம்? என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

வசந்தா அல்லது நான்கு விரல் மர்மம்

என்னும் தொடர் கதையை எழுதிவந்த "தமிழ் மணி" ஆசிரியர் எழுதிய

சொக்கநாதன்

அல்லது

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல்

புஸ்தக ரூபமாக அதிசீக்கிரத்தில் வெளிவருகிறது

காதல், சோகம், ஹாஸ்யம், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த முதல்தரமான துப்பறியும் கதை.

பலவீனத்தைப் பறக்கடித்து,
உடல் நலத்தையும்
தாது விருத்தியையும் தருவது]
சி. எம். சாமி



மன்மத குளிகை என்பதை அறியுங்கள்

இது துர்ச்செய்கைகளின் பலனால் ஏற்பட்ட பலவீனம், போகசக்திக் குறைவு, இவைகளை நிவர்த்தித்து, தளர்ந்த நரம்பை முறுக்கேற்றி மன உற்சாகம், வீரிய விருத்தி முதலியவைகளைக் கொடுக்கும்.
20 குளிகை விலை ரூ. 2-0-0.

கிடைக்குமிடம்:—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.
2 ஷை பிராஞ்சு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
3 இம்பீரியல் பின்மென் அண்டு கூ டோர்ஸ், 107, தாம்ஸன் தெரு, ரங்கூன். (கிழக்கு)

ஜண்டு கேசரி ஜீவன்

தாதுவிருத்தியைக் கொடுக்கும்
சிரேஷ்டமான டானிக்
நமது சப் ஏஜண்டுகளிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
[சேட்லாக் ரீனும்]
தமிழ் நாட்டில் சப் ஏஜண்டுகள்

மதுரை:—டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, வடசித்திரை தெரு.
திருச்சி:—எஸ். வையாபுரி அண்டு கம்பெனி, விநாயகர் மெடிகல் ஹால்.
புதுக்கோட்டை:—அண்ணா கெமிஸ்ட்ஸ்.
சாலை ரோடு:—கணேசா மெடிகல்ஹால்.
குடந்தை:—டாக்டர் எஸ் கோவிந்தசாமி நாயுடு.
தஞ்சாவூர்:—பி. வி. முத்துகிருஷ்ண ராஜா.
கடலூர்:—ஸ்ரீராம பார்மஸி, புதுப்பாளையம்.

or. From Madras Presidency Agents
Damoder & Co, 78, China Bazaar Road, Madras.

Edited, Printed and Published by ... at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St., G. T. Madras.